# கிறிஸ்துவில் வளர...



Catechism of the Catholic Church
என்னும் நூலின்
முக்கிய பகுதிகளின் தமிழாக்கம்

அருட்பணி. மா.றேஜிஸ் இராசநாயகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்துவில் வளர...

அருட்பணியாளர் மா.றேஜிஸ் இராசநாயகம்

வெளியீடு:
ஆயர் இல்லம்
யாழ்ப்பாணம்.
2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்பு விரபம்


| | |
|---|---|
| நூல் | : கிறிஸ்துவில் வளர... |
| ஆக்கம் | : அருட்பணியாளர் மார்க்கு றேஜிஸ் இராசநாயகம் |
| முதற் பதிப்பு | : 1 ஒக்ரோபர் 2012 |
| பதிப்புரிமை | : ஆசிரியருக்கே |
| வெளியீடு | : ஆயர் இல்லம், யாழ்ப்பாணம். |
| விலை | : 150/= |
| அச்சுப்பதிப்பு | : அன்னை அச்சகம், பிரதான வீதி, யாழ்ப்பாணம் |

| | |
|---|---|
| Title | : *Christhuvil Valara...* |
| Author | : Rev. Fr. Marku Regis Rajanayagam |
| First Publication | : 1st October 2012 |
| Copy right | : Author |
| Printing | : Annai Press, Main street, Jaffna. |
| ISBN | : 978-955-6284-08-5 |
| Publishers | : Bishop's House, Jaffna. |


**அச்சேற்றலாம்:**

அருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம்
குரு முதல்வர்
ஆயர் இல்லம்
யாழ்ப்பாணம்.
29.09.2012


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளுறை

## பாகம் 1
## விசுவாச அறிக்கை

பக்கம்

### அதிகாரம் 1 : இறை தந்தையை விசுவசிக்கிறேன்


| | | |
|---|---|---|
| அலகு 1 | : படைப்பின் இறைவன் | 01 |
| அலகு 2 | : தந்தையாகிய இறைவன் | 02 |
| அலகு 3 | : எல்லாம் வல்ல இறைவன் | 03 |
| அலகு 4 | : படைத்த இறைவன் | 04 |
| அலகு 5 | : விண்ணையும் மண்ணையும் படைத்தார் | 06 |
| அலகு 6 | : மனிதன் | 07 |
| | I. கடவுளின் உருவில் | 07 |
| | II. உடலும் ஆன்மாவும் உண்மையில் ஒரு ஆளாக. | 08 |
| | III. ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார். | 09 |
| | IV. இன்ப வனத்தில் மனிதன் | 10 |


### அதிகாரம் 2 : கடவுளின் ஒரே மகனாகிய இயேசுக்கிறிஸ்துவை விசுவசிக்கிறேன்


பகுதி 1

| | |
|---|---|
| I. கடவுள் தன் மகனை அனுப்பினார் | 12 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

II. "கிறிஸ்துவின் அளவற்ற செல்வங்களை பற்றிய நற்செய்தியை அறிவிக்கவும்" 12
III. மறைக்கல்வியின் மையம் : கிறிஸ்து 13

**பகுதி 2 : கடவுளின் ஒரே மகனான இயேசுக் கிறிஸ்துவையும் விசுவசிக்கிறேன்**

I. இயேசு 14
II. கிறிஸ்து 15
III. இறைவனின் ஒரே மகன் 16
IV. ஆண்டவர் 17

**பகுதி 3 : மறைபொருளாகிய கிறிஸ்துவின் வாழ்வு**

I. கிறிஸ்துவின் வாழ்வு முழுவதும் ஒரு மறை பொருள் 18
II. இயேசுவின் குழந்தைப் பருவமும் மறைந்த வாழ்வும் 18

ஆயத்தங்கள் 18
இயேசுவின் பிறப்பு 19
இயேசுவின் குழந்தைப் பருவம் 20
ஆலயத்தில் ஒப்புக் கொடுத்தமை 20
எகிப்துக்கு ஓடிப் போதல் 21
இயேசுவின் மறைந்த வாழ்வு 21
இயேசுவை தேவாலயத்தில் கண்டுபிடித்தல். 22



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதி 4 : இயேசுக்கிறிஸ்து பாடுபட்டு, சிலுவையில் அறையுண்டு, மரித்து அடக்கம் செய்யப்பட்டமை

அலகு 1 : இயேசுவும் இஸ்ராயேலும்

I. இயேசுவும் சட்டமும் 23
II. இயேசுவும் ஆலயமும் 24
III. இயேசுவும் இஸ்ராயேல் மக்களது ஒரே கடவுளின் விசுவாசமும் 25

பகுதி 5 : பாதாளத்தில் இறங்கி மூன்றாம் நாள் மரித்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார்

அலகு 1 : கிறிஸ்து பாதாளத்தில் இறங்கியமை 27
அலகு 2 : மூன்றாம் நாள் மரித்தோரினின்று உயிர்த்தெழுந்தார். 27

I. உயிர்ப்பின் வரலாறு வரலாற்றைக் கடந்த ஒரு நிகழ்வு. 27
காலியான கல்லறை 28
சாட்சிகள் 28
உயிர்த்த கிறிஸ்துவின் மனித நிலை 28
உயிர்ப்பு வரலாற்றைக் கடந்த நிகழ்வு 29
உயிர்ப்பின் அர்த்தமும் மீட்புக்கு அதன் முக்கியத்துவமும் 29



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

IV. காலத்தின் நிறைவில் கிறிஸ்துவின் ஆவி.
யோவான் இயேசுவின் முன்னோடி, இறைவாக்கினர், திருமுழுக்காளர். 30
அருள் நிறைந்தவளே! அகமகிழும். 30

## அதிகாரம் 3 : தூய ஆவியை விசுவசிக்கிறேன்

அலகு 3 : ஏக, பரிசுத்த, கத்தோலிக்க, அப்போஸ்தலிக்க திருச்சபை.
I. ஏக திருச்சபை 32
ஒற்றுமைக்கு எதிரான பாதிப்புக்கள் 33
ஒற்றுமையை நோக்கி 33
II. பரிசுத்த திருச்சபை 34
III. கத்தோலிக்க திருச்சபை 35
நற்செய்தி அறிவிப்பு கத்தோலிக்க திருச்சபைக்கு அவசியமானது. 35
நற்செய்தி அறிவிப்பின் ஆரம்பமும் நோக்கமும் 36
நற்செய்தி அறிவிப்பின் நோக்கம் 36
நற்செய்தி அறிவிப்பின் வழிகள் 36
IV. அப்போஸ்தலிக்க திருச்சபை 37
அப்போஸ்லர்களது பணி 37
ஆயர்கள் - அப்போஸ்தலர்களின் வழித் தோன்றல்கள் 38
அப்போஸ்தலத்துவம் 38

**அலகு 4 : பாவமன்னிப்பை ஏற்றுக் கொள்ளுகிறேன்**
I. பாவ மன்னிப்புக்காக ஒரே திருமுழுக்கு 39
II. திறவுகோலின் வல்லமை. 40



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலகு 5 : I. உடலின் உயிர்ப்பையும் விசுவசிக்கின்றேன்
II. இயேசுக்கிறிஸ்துவில் இறத்தல் 41
இறப்பு 41
கிறிஸ்தவ இறப்பின் அர்த்தம் 42
நடுத்தீர்வை 43
மோட்சம் 44
உத்தரிப்பு ஸ்தலம் 45
நரகம் 46

## பாகம் 3
## கிறிஸ்துவில் வாழ்வு

### 1வது பெரும் பிரிவு
### மனிதனுக்கான அழைப்பு அருள் வாழ்வுக்கு

அதிகாரம் 1 : மனித மாண்பு
I. பேறுபெற்றோராயிருக்க நமக்கு விடுக்கப்படும் அழைப்பு 47
II. மகிழ்ச்சிக்கான ஆவல் 48
III. கிறிஸ்தவ பேறுபெற்ற நிலை. 48

பகுதி 4: மனித செயல்களின் ஒழுக்கப் பண்புகள் 50
I. ஒழுக்கப் பண்புகளின் ஊற்று 50

அதிகாரம் 3 : இறைவனின் மீட்பு ; சட்டமும் அருளும்

பகுதி 1 அறநெறிச்சட்டம் 52
I. இயற்கை அறநெறிச்சட்டம் 52



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

II. பழைய சட்டம் 53
III. புதிய சட்டம் அல்லது நற்செய்திச் சட்டம் 54

## 2வது பெரும் பிரிவு
## பத்துக்கற்பனைகள்

அதிகாரம் 1 : உன் கடவுளாகிய ஆண்டவரை உன் முழு உள்ளத்தோடும், முழு ஆன்மாவோடும் முழு வலிமையோடும் அன்பு செய்வாயாக

பகுதி 1 முதலாவது கற்பனை 56
I. உன் கடவுளாகிய ஆண்டவரை ஆராதித்து அவருக்கு மட்டுமே பணி புரிவாயாக 56
விசுவாசம் 57
நம்பிக்கை 57
அன்பு 57
II. அவருக்கு மட்டுமே பணி புரிவாயாக 58
ஆராதனை 58
செபம் 58
பலி 58
வாக்குறுதிகளும் வாக்குத்தக்கங்களும் 59
III. என்னைத் தவிர வேறு கடவுள் உனக்கு இல்லாமல் போவதாக. 59
மூட நம்பிக்கை 59
விக்கிரக ஆராதனை 59



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதி 2 இரண்டாங் கற்பனை 60
பகுதி 3 மூன்றாங் கற்பனை 61

அதிகாரம் 2 : "உன்னை அன்பு செய்வது போல உன் அயலானையும்அன்பு செய்வாயாக" 62

பகுதி 4 நாலாங் கற்பனை 63
பகுதி 5 ஐந்தாங் கற்பனை 65
பகுதி 6 ஆறாங் கற்பனை 67
பகுதி 7 ஏழாங் கற்பனை 68
பகுதி 8 எட்டாங் கற்பனை 71
பகுதி 9 ஒன்பதாங் கற்பனை 73
பகுதி 10 பத்தாங் கற்பனை 74



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி ஏடு வத்திக்கானிலிருந்து வெளியிடப்பட்டு 20 வருடங்களுக்கு மேலாகிவிட்டன. அதன் தாக்கம் உலகின் பல பாகங்களிலும் குறிப்பாக ஆசியாவிலும் நன்கு உணரப்படுகின்றபோதும் இதன் தமிழ் மொழிபெயர்ப்புக்கள் எதுவும் எமது தாய் மண்ணில் இதுவரை வெளிவரவில்லை.

இலங்கைத் தமிழ் மறை மாவட்டங்களின் ஆயர்களினால் இவ்வாண்டு மறைக்கல்வி ஆண்டாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ள நிலையில் கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வியின் அவசியத்தினை உணர்ந்து அருட்பணி மா.றேஜிஸ் இராசநாயகம் அடிகள் மேற்படி ஏட்டின் நான்கு பெரும் பிரிவுகளிலுள்ள 22 தலைப்புக்களை மொழி பெயர்த்துள்ளார். இதை இம் மறையாண்டில் தமிழ் இறையியல் கல்லூரிகளும் கிறிஸ்தவ உயர்கல்வி நிறுவனங்களும் பயன்படுத்தி பயனடைவார்களாக. வளர்ந்தோருக்கான மறைக் கல்வியை முன்னெடுக்கும் பங்குத்தளங்களுக்கும் இது கைகண்ட ஔடதம் என்பதில் ஐயமில்லை.

† பேரருட்திரு. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை
யாழ்.ஆயர்
ஆயர் இல்லம்
யாழ்ப்பாணம்
29.09.2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

திருமறைப் போதகத்தை மக்களுக்குச் சரியாக அளிப்பதற்கு உதவியாக, திரிதேந்து பொதுச்சங்கத்தின் (1545 - 1563) தீர்மானத்தின்படி திருத்தந்தை 5ம் பத்திநாதர் உரோமைத் திருமறைப் போதகக் கைநூலை வெளியிட்டார். 1985ம் ஆண்டில் நடைபெற்ற ஆயர்கள் சங்கத்தின் சிறப்பு அமர்வில் "கத்தோலிக்க மறைப்போதகத்தின் கைநூல் ஒன்று இயற்றப்பட வேண்டும்" என்று தீர்மானிக்கப்பட்டது. இத்தீர்மானத்தை திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர், "கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி ஏடு" என்ற நூலை 1992ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 7ந் திகதி வெளியிட்டு நிறைவேற்றியுள்ளார். இதுவே 2ம் வத்திக்கான் சங்கத்தின் மறைக்கல்வி ஏடு. இவ்வேடு வெளியிடப்பட்டு 20 வருடங்களுக்கு மேலாகியும் இதனை தாய் மொழியில் கற்பதற்கு ஏற்ற விளக்கமான தமிழ் மொழி பெயர்ப்பு எதுவும் வெளிவராத நிலையில் கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி நூல் வெளியிடப்பட்டு 20ம் ஆண்டின் நிறைவாக அந்நூலிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட 22 தலைப்புக்களை மொழிபெயர்த்து உங்கள் கரங்களில் தவழவிடுகின்றேன்.

இச்சிறிய நூலில், படைப்பிலே மனிதனின் தனித்துவமான இடம், இயேசுக்கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசம், இயேசுவின் குழந்தைப் பருவம், மறைந்த வாழ்வு, பாஸ்கா நிகழ்வு, திருச்சபை வாழ்வு, பாவமன்னிப்பு, இறுதிக்கால இறையியல், மலைப்பொழிவின் அழைப்பு, மனித செயல்களின் ஒழுக்கப் பண்புகள், அறநெறிச்சட்டம் என்பன உள்ளடங்குகின்றன.

இந்நூலில் உள்ள உள்ளீடுகள் COLLEGE DE FATIMA நிறுவனத்தால் "ஆசியாவில் திருச்சபை" என்னும் தலைப்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2005ம் ஆண்டில் நடத்தப்பட்ட கற்கை நெறியில் கொடுக்கப்பட்ட பாடங்களாகும். 'படைப்பின் இறைவன்' என்பதிலிருந்து 'விண்ணையும் மண்ணையும் படைத்தார்' என்ற பகுதியும் இரண்டாம் கற்பனை முதல் பத்தாம் கற்பனை வரை உள்ளடங்குபவை மாத்திரம் தேவை கருதி மேதகு ஆயர் வ.தியோகுப்பிள்ளை ஆண்டகை சுருக்கமாக எழுதிய "கத்தோலிக்க திருச்சபையின் மறைபோதகக் கைநூல்" என்னும் ஏட்டைத் தழுவி தற்போதைய மாணவர்களுக்கு ஏற்றவாறு மொழியாக்கம் செய்து தரப்படுகின்றது.

மறையறிவை வளர்க்க விரும்பும் ஆசிரியர்களுக்கும் அதில் வளர விரும்பும் மாணவர்களுக்கும் இச்சிறிய நூல் ஒரு பயனுள்ள கையேடாக அமையுமென நம்புகின்றேன். உலக அறிவில் உயர்ந்து வளரும் நம் சமூகம் அதற்கொத்திசைவாக மறையறிவிலும் வளரவேண்டுமென்பதே எனது எதிர்பார்ப்பு. அதற்கு இச்சிறிய கையேடு உதவுமென நம்புகின்றேன்.

"கிறிஸ்துவில் வளர..." என்னும் இந் நூலுக்கு தனது நல் ஆசியுரையை வழங்கிய எனது பேரன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய ஆயர் அருட்கலாநிதி இ.தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களுக்கும், அச்சேற்ற அனுமதியளித்த குருமுதல்வர் அருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களுக்கும், இறைவார்த்தை வாழ்விலே என்னை வளரச் செய்வதோடு, "ஆசியாவில் திருச்சபை" என்னும் கற்கை நெறியில் கொடுக்கப்பட்ட பாடக்குறிப்புகளை பலரின் பயன்பாட்டிற்காக அச்சேற்ற ஆர்வமும் தூண்டுதலும் தந்த என் மதிப்பிற்குரிய அருட்கலாநிதி யோ.இ.ஜெயசீலன் அவர்களுக்கும் அட்டைப்படம் வரைந்த திரு.டோமினிக் ஜீவா அவர்களுக்கும், தரமாக, அழகாக, அச்சிட்டுத்தந்துள்ள அன்னை அச்சகத்தாருக்கும் என் இதய நன்றிகள்.

மா.றேஜிஸ் இராசநாயகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாகம் – I

### விசுவாச அறிக்கை

## அதிகாரம் – I

### இறை தந்தையை விசுவசிக்கிறேன்

### அலகு 1 - படைப்பின் இறைவன்

"இஸ்ராயேலே செவிகொடு; நம் கடவுளாகிய ஆண்டவர் ஒருவரே ஆண்டவர்" (இ.ச 6:4 ; மாற்கு 12:29) ''இருக்கும் உன்னத பொருள் தனிப் பொருளாகவே, அதற்குச் சரிசமமானது எதுவும் இல்லாததாக, இருக்க வேண்டும். கடவுள் தனிப் பொருள்; இல்லையேல், அவர் கடவுளில்லை" (தேர்த்துல்லியன்).

கடவுள்மேல் உள்ள விசுவாசம் அவரை நமது தொடக்கமும் முடிவுமாக ஏற்கவும், அவருக்குப் பதிலாக வேறொருவரை விரும்பாமலிருக்கவும் இட்டுச் செல்கின்றது.

கடவுள் தம்மை வெளிப்படுத்தும்போது அறிக்கையிட முடியாத மறைபொருளாகவே இருக்கின்றார். "அவரை நீ முற்றாக அறிந்தால் அவர் கடவுளாய் இருக்கமாட்டார்" (புனித அகுஸ்தீனார்)

நாம் விசுவசிக்கும் கடவுள் "இருப்பவராகவே" தம்மை வெளிப்படுத்தியுள்ளார். "இரக்கமும் பரிவும்" (வி.ப. 34:6) உள்ளவராக வெளிப்படுத்தியுள்ளார். அவரே உண்மையும் அன்பும் ஆனவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலகு 2 - தந்தையாகிய இறைவன்

அதிதூய மூவொரு கடவுளின் மறைபொருள் கிறிஸ்தவ விசுவாசத்தினதும், வாழ்வினதும் மறைபொருள். இதன் அறிவை கடவுளே தம்மை தந்தை, மகன், தூய ஆவி என வெளிப் படுத்தித் தரமுடியும்.

மகனாகிய இறைவனின் மனுவுரு எடுத்தல் கடவுள் முடிவற்றவரும் தந்தையுமாக இருக்கிறார் என்றும், மகன் தந்தையோடு ஒரே சுபாவமானவர், அதாவது, அவர் தந்தையிலும் தந்தையோடும் ஒரே கடவுளாய் இருக்கிறார் என்றும் வெளிப்படுத்துகிறது.

தூய ஆவி தந்தையாலும் மகனாலும் அனுப்பப்படல், அவர் அவர்களோடு ஒரே கடவுளாய் இருக்கிறார் என்பதை வெளிப்படுத்துகிறது. "இவர் பிதாவோடும் சுதனோடும் ஒன்றாக ஆராதனையும் மகிமையும் பெறுகின்றார்." (விசுவாசப் பிரமாணம்)

"தூய ஆவி முதல் ஊற்றாகிய தந்தையில் நின்றும், அவர் நித்தியமாகத் தம்மை மகனுக்கு அளிப்பதனால் தந்தையிலும் மகனிலும் நின்றும் புறப்படுகின்றார்" (புனித அகுஸ்தீனார்)

தந்தை, மகன், தூய ஆவியின் பெயரால் பெறப்படும் திருமுழுக்கின் அருளால் மூவொரு இறைவனின் வாழ்வில், விசுவாசத்தின் வழியாக இவ்வுலகில் மங்கலாகவும், மரணத்தின் பின் நித்திய ஒளியினாலும் பங்குபற்ற அழைக்கப்படுகின்றோம்.

"கத்தோலிக்க விசுவாசம் ஒரே இறைவனை மூவொரு தன்மையிலும், மூவொரு தன்மையை ஒற்றுமையிலும், ஆட்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறுபடுத்தாமலும் இயல்பைப் பிரிக்காமலும் வணங்குவதிலே தான் தங்கியுள்ளது. ஏனெனில் தந்தையின் ஆள்தன்மையும், மகனின் ஆள்தன்மையும் தூய ஆவியின் ஆள்தன்மையும் வித்தியாசமானவை. ஆனால், தந்தையினதும், மகனினதும், தூய ஆவியினதும் இறை இயல்பு ஒன்றே, மகிமை சமமானது, மாட்சிமை முடிவில்லாதது. ("Quicumque" என்ற விசுவாசப் பிரமாணம்)

இறை ஆட்கள் தங்களில் பிரிக்க முடியாதவர்களாய் இருப்பது போல, தங்கள் செயற்பாட்டிலும் பிரிக்க முடியாதவர்கள். ஆனால் தங்கள் ஒரே செயலில் ஒவ்வொரு தெய்வீக ஆளும் தமக்குச் சிறப்பாயுள்ளதைக் காண்பிக்கின்றனர். இது இறை மகனின் மனுவுரு எடுத்தலிலும், தூய ஆவியின் வருகையிலும் சிறப்பாகக் காணப்படுகின்றது.

## அலகு 3 - எல்லாம் வல்ல இறைவன்

"நீர் அனைத்தையும் ஆற்ற வல்லவர், அறிவேன் அதனை; நீர் நினைத்த எதையும் தடுக்க இயலாது" (யோபு 42:2) என்று நீதிமானான யோபுவுடன் நாமும் அறிக்கையிடுவோம்.

திருமறை நூலின் சாட்சியத்தைப் பிரமாணிக்கமாய்ப் பின்பற்றி, திருச்சபை தனது செபத்தை "எல்லாம் வல்ல நித்திய இறைவனுக்கு" அடிக்கடி சமர்ப்பிக்கிறது. ஏனெனில் "கடவுளால் ஆகாதது ஒன்றுமில்லை" (லூக் 1:37; தொ.நூ 18:14) என்று அது உறுதியாக நம்புகிறது.

கடவுள் நம்மை நமது பாவங்களிலிருந்து மீட்டு, தமது அருளினால் தமது அன்பில் மீண்டும் நிலைநாட்டுவதால் தமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவற்ற வல்லமையைக் காட்டுகிறார். "மன்னிப்பு அளிப்பதாலும், இரக்கங் காட்டுவதாலும் எல்லாம் வல்லவரென்று சிறந்த முறையில் இறைவன் காட்டுகின்றார்..." (26ஆம் ஞாயிறு பூசையின் சபைச் செபம்)

இறைவனின் அன்பு எல்லா வல்லமையுமுள்ளது என்று விசுவசியாமல், தந்தை எங்களைப் படைத்தார், மகன் எங்களை மீட்டார், தூய ஆவி எங்களைப் புனிதப்படுத்துகிறார் என்று எவ்வாறு விசுவசிக்க முடியும்?

## அலகு 4 - படைத்த இறைவன்

பூமியினதும் மனிதனதும் படைப்பினால் கடவுள் தமது அளவு கடந்த அன்பிற்கும், ஞானத்திற்கும் முதலானதும், பொதுவானதுமான அத்தாட்சியையும் தமது அன்புத்திட்டத்தின் முதல் அறிவிப்பையும் தந்துள்ளார். ''அன்புத் திட்டம்'' கிறிஸ்து நாதரின் புதிய படைப்பில் நிறைவேறும்.

படைப்புத்தொழில் தந்தையாகிய கடவுளுக்குச் சிறப்பாக உரியதாகக் கூறப்பட்டாலும், தந்தையும் மகனும் தூய ஆவியும் படைப்பின் பிரிபடாத ஒரே காரணர் என்பது விசுவாச சத்தியமாகும்.

கடவுள் உலகம் முழுவதையும் சுதந்திரமாகவும், நேரடியாகவும், எவரின் உதவியின்றியும் படைத்தார்.

"படைத்தல்" என்றால் ஒன்றுமில்லாமையிலிருந்து தோன்றச் செய்தல், இதற்கு அளவற்ற வல்லமை தேவை. அது இறைவனிடம் மட்டுமே உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் தமது மகிமையை வெளிப்படுத்துவதற்காகவே உலகைப் படைத்தார். தமது படைப்புக்கள் தமது உண்மையில், நன்மைத் தனத்தில், தமது அழகில், பங்குபெறும் பொருட்டே அவற்றைப் படைத்தார். இவ்வாறு கடவுளின் மகிமை வெளிப்படுத்தப் பட்டது.

உலகைப் படைத்த இறைவன் அதைத் "தம் வல்லமை மிக்க சொல்லால் எல்லாவற்றையும் தாங்கி நடத்துகிறார்" (எபி. 1: 3); வாழ்வளிக்கும் ஆவியினாலும் பாதுகாத்து வருகிறார்.

எல்லாப் படைப்புக்களும் தங்கள் இறுதிக்கதியை அடையும்படி இறைவன் கையாளும் திட்டங்களே இறை பராமரிப்பு எனப்படுகிறது.

ஒரு பிள்ளைக்குரிய நம்பிக்கையோடு இறை தந்தையின் பராமரிப்புக்கு நம்மைக் கையளிக்குமாறு கிறிஸ்து அழைக்கிறார். (மத் 6:26-34). "உங்கள் கவலைகளை எல்லாமே அவரிடம் விட்டு விடுங்கள். ஏனெனில் அவர் உங்கள்மேல் கவலை கொண்டுள்ளார்" (1 பேதுரு 5:7) என்று திருத்தூதரான பேதுரு கூறுகின்றார்.

இறை பராமரிப்பு படைப்புக்களைக் கொண்டும் செயற் படுத்தப்படுகின்றது. இதன் மூலம் தமது திட்டத்தோடு சுதந்திரமாக ஒத்துழைக்கும் வாய்ப்பை இறைவன் மனிதருக்கு அளிக்கிறார்.

இயற்கையிலும் ஒழுக்கத்திலும் தீமையின் இருப்பியல் பற்றிய இரகசியத்தை இறைவன் தீமையை வெல்ல மரித்து உயிர்த்த தமது திருமகனாகிய இயேசு கிறிஸ்து மூலம் விளக்கியுள்ளார். தீமையிலிருந்து நன்மை பிறக்காவிடின் தீமை இருக்க இறைவன் அனுமதிக்கமாட்டார் என்று விசுவாசம் நமக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதியளிக்கின்றது. தீமையிலிருந்து நன்மை பிறப்பது எவ்வாறென்பதை முடிவற்ற வாழ்விலேயே நாம் முழுமையாக அறிய முடியும்.

## அலகு 5 - விண்ணையும் மண்ணையும் படைத்தார்.

வானதூதர் உடலற்ற படைப்புகள். அவர்கள் இறைவனை இடைவிடாது மகிமைப்படுத்தி, மற்றைய படைப்புகள் மட்டில் அவர் கொண்டுள்ள மீட்புத் திட்டங்களை நிறைவேற்ற உதவி புரிகின்றனர்.

அலகையும் அவனது கூட்டத்தாரும் இறைவனுக்கும் அவருடைய திட்டத்திற்கும் பணிய மறுத்து, தங்கள் நிலையிலிருந்து வீழ்ச்சியடைந்த வானதூதர்களே. அவர்களின் மறுப்பு நிரந்தரமானது. அவர்கள் மனிதனைக் கடவுளுக்கு எதிராகத் தங்கள் மறுப்பில் பங்குகொள்ளத் தூண்டுகின்றனர்.

வானதூதர்கள் தங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து நாதரைச் சூழ்ந்து நிற்கின்றனர். அவர் மனிதர் மட்டில் மேற்கொண்ட மீட்புப்பணியை நிறைவேற்ற அவருக்குச் சிறப்பான முறையில் பணிபுரிகின்றனர்.

திருச்சபை தனது பயணத்தில் துணைபுரியும் வானதூதர்களுக்கும், எல்லா மனிதரையும் பாதுகாத்துவரும் வானதூதர்களுக்கும் வணக்கம் செலுத்துகிறது.

இறைவன் படைப்புகளிலுள்ள வேற்றுமையையும், அவைகளில் காணப்படும் நன்மைத்தனத்தையும், அவைகளுக்கிடையிலுள்ள ஒழுங்கையும் தொடர்பையும் விரும்பியுள்ளார். சடப்பொருளான படைப்புகளை மனுக்குலத்தின் நன்மைக்காகவே அளித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைப்புகளில் பதிக்கப்பட்டுள்ள இயற்கை விதிகளையும் அவைகளிடையே காணப்படும் இயல்பான தொடர்புகளையும் மதித்தல், ஞானத்தின் மேல்வரிச் சட்டமும், ஒழுக்க வாழ்வின் அத்திவாரமும் ஆகும்.

## அலகு 6 - மனிதன்

கடவுள் தம் உருவில் மானிடரைப் படைத்தார்...

தொ.நூ: 1 :27

355. இறைவன் படைப்பிலே மனிதன் தனித்துவமான இடத்தைப் பெறுகிறான்.

1) அவன் கடவுளின் சாயல்
2) தனது சாயலில் ஆன்மீக, சடப்பொருள் உலகங்களை இணைக்கின்றான்.
3) அவன் ஆணும் பெண்ணுமாகப் படைக்கப் பட்டிருக்கிறான்.
4) இறைவனின் அன்பிலே படைக்கப்பட்டுள்ளான்.

## I. கடவுளின் உருவில்

356. இறைவனின் சாயலான படைப்புக்களில் மனிதன் ஒருவனே ''கடவுளை அறிந்து அன்பு செய்யக் கூடியவன்" (இன்றைய உலகில் திருச்சபை 12:3) அவன் ஒருவனே தன்னுடைய அறிவாலும் அன்பாலும் இறைவனின் வாழ்வில் பங்கு கொள்ளக் கூடியவன். இதற்காகவே படைக்கப்பட்டான். இதுதான் அவனது மாண்பின் அடிப்படைக் காரணம்.

357. அவன் கடவுளின் சாயலாகப் படைக்கப்பட்டதால் ஒவ்வொரு மனிதனும் ஆள் என்ற மாண்பைக் கொண்டுள்ளான்; அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பொருளல்ல, ஒரு ஆள். அவனுக்கு சுய அறிவு உண்டு. அவன் சுயமாக தன்னை மற்றவர்களுக்குக் கொடுக்கவும், மற்றவர்களோடு தொடர்பு கொள்ளவும் முடியும். இறை அருளால் இறைவனோடு உடன்படிக்கை செய்ய உரித்தான விதத்தில் அன்பு செய்யவும் முடியும்.

358. இறைவன் அனைத்தையும் மனிதனுக்காகப் படைத்தார். ஆனால் மனிதனை தனக்குப் பணிவிடை செய்து அன்பு செய்யவும் இவ்வாறு படைப்புகள் அனைத்தையும் இறைவனுக்கு ஒப்புக் கொடுக்கவுமே படைத்தார்.

359. ''மனுவுடலேற்ற வார்த்தையானவரின் மறை பொருளில் தான் மனிதனின் மறைபொருள் உண்மையாகவே விளக்கம் பெறுகிறது'' (இ.உ.தி 22:1)

360. ஒரே ஊற்றிலிருந்து மனுக்குலம் ஆரம்பமாவதால் மனுக் குலத்துள் ஓர் ஒற்றுமை நிலவுகிறது ''ஒரே ஆளிலிருந்து அவர் மக்களினம் அனைத்தையும் படைத்து அவர்களை மண்ணுலகின் மீது குடியிருக்கச் செய்தார்'' (தி.ப. 17:26)

## II. உடலும் ஆன்மாவும் உண்மையில் ஒரு ஆளாக...

362. இறைசாயலாகப் படைக்கப்பட்ட மனிதன், சடப்பொருளும் சித்துப் பொருளும் கொண்டவனாகப் படைக்கப்பட்டுள்ளான். இதைத்தான் விவிலியம் உருவகமாக தொ.நூ 2: 7ல் குறிப்பிடுகிறது. முழு மனிதனும் இறைவன் திட்டப்படி படைக்கப்பட்டவன்.

363. விவிலியத்தில் ''ஆன்மா'' என்பது பலவேளைகளில் மனித வாழ்வை அல்லது முழு மனித ஆளைக் குறிக்கின்றது. ''ஆன்மா'' என்பது மனித அடித்தளத்திலுள்ள பெறுமதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக்க ஒன்றையும் குறிக்கின்றது. மத் 16:25-26 ; யோவான் 15:13; தி.பா 2:41
எதனால் அவன் கடவுளின் சாயலோ அதுவே ஆன்மா என்றழைக்கப்படுகிறது.

364. மனித உடல் இறைசாயல் என்ற மனித மாண்பிலே பங்குபற்றுகின்றது. மனித ஆன்மாவால் இயக்கப்படுவதால் மனித உடல் என்று அழைக்கப்படுகிறது.
உடலும் ஆன்மாவும் சேர்ந்துதான் கிறிஸ்துவின் உடலாகவும், தூய ஆவியின் ஆலயமாகவும் ஆகின்றது. 1 கொரி 6 :19-20

365. உடலுக்கும் ஆன்மாவுக்குமிடையிலான தொடர்பு மிக நெருக்கமானது. ஆன்மாவால்தான் உடல் வாழ்கின்றது. உடலும் ஆன்மாவும் வெவ்வேறு சுபாவங்களல்ல; இரண்டும் சேர்ந்து ஒரே சுபாவமாகிறது.

366. ஒவ்வொரு ஆன்மாவும் உடனடியாக இறைவனால் படைக்கப் படுகிறது; பெற்றோரால் அல்ல. ஆன்மா அழியாதது. உடலிலிருந்து பிரியும்போது அழியாமல் மீண்டும் உயிர்ப்பிலே உடலோடு இணைகின்றது.

368. ஆன்மீக பாரம்பரியம் இதயத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றது. விவிலிய நோக்கில் ஒருவரின் ஆழத்தில் ஒருவர் இறைவனுக்கெதிராகவோ சார்பாகவோ வாழத் தீர்மானிக்கிறார்.
எரே 31:33; இ.ச 6:6; எசா 29:13; மத் 6:21

## III. ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார். சமத்துவமும் வேற்றுமையும் இறைவன் தீர்மானித்தவை.

369. மனித ஆட்கள் என்ற முறையில் சமத்துவமாகவும் அதேவேளை ஆண் பெண் என்ற வித்தியாசங்களுடனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைக்கப்பட்டான். ஆணாகிலும் பெண்ணாகிலும் அது நல்லதாக இறைவனால் விரும்பப்பட்டதாகவுள்ளது. ஆணோ பெண்ணோ அவர்களின் மாண்பு நேரடியாக படைத்தவரிடமிருந்தே வருகின்றது. ஆண் பெண் இருவருமே இறைசாயல் என்ற மாண்பிலே பங்கு பற்றுகின்றனர்.

371. "ஒருவர் ஒருவருக்காக" "இருவரும் இணைந்து ஒன்றாக" ஒருவர் ஒருவருக்காக வாழவே இறைவன் படைத்தார். இதை விவிலியம் வெவ்வேறு விதத்தில் விளக்குகின்றது. தொ.நூ 2:18; விலங்குகள் மனிதனுக்கு இணையாக இருக்க முடியாது. தொ.நூ 2:19 - 20; மனித விலாவிலிருந்து எடுக்கப்பட்டதும் மனிதனின் ஆச்சரியமும்; தொ.நூ 2:23. மனிதன் பெண்ணிலே இன்னுமோர் " தன்னை" தனது மனிதத்தன்மையில் பங்குபற்றும் ஒருத்தியாகக் காண்கிறான்.

372. ஒருவர் ஒருவருக்காக வாழப் படைத்தார். தங்களிலே குறைபாடுள்ள படைப்புக்களல்ல. அவர்கள் ஆள் என்ற முறையில் சமம் (என் எலும்புகளில் எலும்பும்...) ஒருவரையொருவர் நிறைவு செய்பவர்கள். "ஒரே உடலாயிருப்பார்கள்" தொ.நூ 2:24. இன விருத்தியிலே கடவுளின் படைப்புச் செயலில் தனித்துவமாகப் பங்குபற்றுகிறார்கள்.

373. இறைத் திட்டத்தில் மனிதன் பூமியை "ஆண்டு நடத்த" அழைக்கப்பட்டவன். எப்படியுமென்றல்ல. இறைவன் தம் படைப்பை நல்லதென்று கண்டு நேசித்தது போல மனிதனும் பொறுப்புள்ள விதமாக ஆண்டு நடத்த அழைக்கப்பட்டுள்ளான்.

## IV. இன்பவனத்தில் மனிதன்.

374. முதல் மனிதன் நன்றாகப் படைக்கப்பட்டது மாத்திரமல்ல; இறைவனின் நட்புறவிலே, தன்னோடும் பிற படைப்புக்களோடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றுமையுடன் வாழப் படைக்கப்பட்டவன். இந்த நிலை கிறிஸ்துவினால் ஏற்படும் புதுப்படைப்பால் மட்டுமே மேற்கொள்ளப்படும்.

375. இந்த நிலையையே விவிலிய உருவகத்தின் ஊடாக திருச்சபை நீதியிலும் புனிதத் தன்மையிலும் இருந்தார்கள் என்று திரிதெந்தின் சங்கம் கூறுகின்றது. இந்த நிலையைத் தான் "தெய்வீக வாழ்வில் பங்கு கொள்ளுதல்" என்று (வத்.2) திருச்சபை 2 கூறுகிறது.

376. இதன் விளைவு மனித வாழ்வு முழுவதும் பரவியிருந்தது. இறைவனின் அன்புறவில் வாழும்போது மனிதனுக்கு வேதனையோ சாவோ இல்லை. தொ.நூ 2:17. ஆணுக்கும் பெண்ணுக்குமிடையிலே இருந்த ஒற்றுமை. தொ.நூ 2:25ல் குறிப்பிடப்படுகிறது. இது தான் ஆரம்ப இன்பநிலை...

377. படைப்புக்கள் அனைத்தையும் ஆளக் கொடுக்கபட்ட வல்லமை முதலில் தன்னை ஆளக் கொடுக்கப்பட்டது. முதல் மனிதன் மூவித இச்சைகளால் ஈர்க்கப்படாதவனாக (காண்: யோவான் 2:16) புத்தியால் கட்டுப்பட்டவனாக இருந்தான்.

378. இறைவனோடு நட்புறவில் இருந்ததன் அடையாளம்தான் "இன்பவனத்தில்" இருந்தது. தொ.நூ 2:8. அதை ஆண்டு நடத்த - வேலை பழுவாக இருக்கவில்லை. படைப்பை நிறைவுபடுத்துவதில் மனிதனின் பங்களிப்பாக இருந்தது.

379. இறைவனால் முன்குறிக்கப்பட்ட மனிதனின் இன்பநிலை மனிதனின் பாவத்தால் இழக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரம் – 2

## கடவுளின் ஒரே மகனான இயேசுக்கிறிஸ்துவை விசுவசிக்கிறேன்.

### பகுதி 1

### I. கடவுள் தம் மகனை அனுப்பினார்.

422. கலா 4: 4-5 ''ஆனால் காலம் நிறைவேறியபோது திருச்சட்டத்திற்கு உட்பட்டிருந்த நம்மை மீட்டு தம் பிள்ளைகள் ஆக்குமாறு கடவுள் தம் மகனை பெண்ணிடம் பிறந்தவராகவும்'', ''கடவுளின் மகனான இயேசுக் கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தி'' மாற் 1:1, "தமது ஒரேபேறான மகனையே" மாற் 1:11 நம்மிடம் அனுப்பினார்.

423. கன்னி மரியாளிடமிருந்து பிறந்து போஞ்சியு பிலாத்தின் கீழ் பாடுபட்டு சிலுவையில் அறையுண்டு மரித்த நசரேத்து இயேசு கடவுளின் நித்திய மகனாக இருந்து மனிதனானவர் என்பதை விசுவசிக்கின்றேன். யோவா 1:14, 16

424. "உயிர்வாழும் இறைமகனான கிறிஸ்து நீரே" மத் 16:16

### II. "கிறிஸ்துவின் அளவற்ற செல்வங்களைப் பற்றிய நற்செய்தியை அறிவிக்கவும்." எபே 3:8

425. கிறிஸ்தவ விசுவாசத்தைக் கொடுப்பது என்பது முதலில் மற்றவர்கள் கிறிஸ்துவில் விசுவாசங்கொள்ளும்படி அவரை அறிவிப்பதாகும்.
முதல் சீடர் கிறிஸ்துவை அறிவிக்கத் துடித்துக் கொண்டிருந்தார்கள். 1யோவா 1:1-4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## III. மறைக்கல்வியின் மையம் : கிறிஸ்து

426. மறைக்கல்வியின் மையமாக நாரேத்தூர் இயேசு என்னும் ஒரு ஆளைப் பார்க்கின்றோம். "இவர் தந்தையின் ஒரே பேறான மகன்... எமக்காக மரித்து உயிர்த்த பின் நித்தியத்துக்கும் வாழ்கின்றார்." மறைக்கல்வியூட்டுவது என்பது "இறைவனின் நித்திய திட்டங்கள் அனைத்தும் கிறிஸ்துவினால் தெளிவாக்கப்பட்டு கிறிஸ்துவிலே நிறைவேறுகின்றன என்பதையும் கிறிஸ்துவினுடைய சொல், செயல்களையும் அவரால் செய்யப்பட்ட அருஞ் செயல்களையும் அறிந்துகொள்ளச் செய்வதாகும்". மறைக்கல்வியின் நோக்கம் மக்களை கிறிஸ்துவோடு தொடர்புகொள்ளச் செய்வதாகும். அவரே நம்மை தந்தையோடு அன்புறவு கொள்ள இட்டுச் செல்பவர்.

427. மறைக்கல்வியில் "இறைவனின் மகனான மனுவுரு எடுத்த கிறிஸ்துவே அறிவிக்கப்படுகிறார்." கற்பிக்கப்படும் மற்ற அனைத்தும் அவரோடு தொடர்புள்ளவையே. மறைக்கல்வி கற்பிக்கும் எவரும் கிறிஸ்துவின் வாயாகவே இருந்து செயல்படுகின்றனர். "நான் கொடுக்கும் போதனை என்னுடைய தன்று; என்னை அனுப்பியவருடையதே." யோவா. 7:16

428. யாராவது கிறிஸ்துவை கற்பிக்க விரும்பினால்... பிலிப் 3:8-11

429. இத்தகைய அறிவிலிருந்துதான் கிறிஸ்துவை அறிவிக்கும் ஆவல் உருவாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி 2

## கடவுளின் ஒரே மகனான இயேசுக் கிறிஸ்துவையும் விசுவசிக்கிறேன்.

### I. இயேசு

430. எபிரேயத்தில் "இயேசு" என்றால் "கடவுள் காப்பார்" என்று பொருள். மங்கள வார்த்தையின்போது இயேசுவின் சுய அடையாளமும் அவரது பணியும் அறிவிக்கப்படுகிறது. "மக்களை அவர்களின் பாவங்களிலிருந்து காப்பார்" லூக் 1:31.

431. மீட்பின் வரலாற்றில் கடவுள் இஸ்ராயேல் மக்களை எகிப்தின் அடிமைத் தனத்தினின்று மாத்திரமல்ல, அவர்களது பாவங்களினின்றும் விடுவிக்கிறார்.

432. "இயேசு" என்னும் பெயர் கடவுள் தன் மகனில், அனைத் துலக பாவங்களின் மீட்புக்காக பிரசன்னமாயிருப்பதைக் காட்டுகின்றது. கடவுளின் பெயர் ஒன்றே நமக்கு மீட்பைக் கொண்டு வரும். தி.ப 4:12.

433. மீட்பரின் பெயர் ஆண்டுக்கு ஒரு முறை மாத்திரம் தலைமைக் குருவால் இஸ்ராயேலரின் பாவப்பரிகாரத்துக்காகத் தெளிக்கப்பட்டபின் சொல்லப்பட்டது. புனித பவுல் உரோ 3:25... என்று சொல்லும் போது 2 கொரி 5:19 "கிறிஸ்துவின் வாயிலாக உலகினரைத் தம்மோடு ஒப்புரவாக்கினார்" என்று கூறுகிறது.

434. இயேசுவின் உயிர்ப்பு மீட்பரின் பெயரை மகிமைப்படுத்துகின்றது. உயிர்ப்பு தொடக்கம் இயேசுவின் பெயரே கடவுளின் வல்லமையை வெளிப்படுத்துகின்றது. "எப்பெயருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலான பெயரை அவருக்கு அருளினார்" பிலிப் 2:9-10. அசுத்த ஆவிகள் அவரது பெயருக்கு அஞ்சுகின்றன; சீடர்கள் புதுமைகள் செய்கின்றனர்; அவரது பெயரால் கேட்பதெல்லாம் தந்தை அருளுகின்றார்.

435. இயேசுவின் பெயர்தான் எல்லாச் செபங்களினதும் மையமாக இருக்கிறது. வழிபாட்டுச் செபங்கள் "எங்கள் ஆண்டவர் இயேசுக்கிறிஸ்து வழியாக..." அருள் நிறைந்த மரியே என்னும் செபமும் "உம்முடைய வயிற்றின் கனியாகிய இயேசுவும்" என்ற உச்சக்கட்டத்தை அடைகிறது.

## II. கிறிஸ்து

436. "கிறிஸ்து" என்றால் "மெசியா", "திருப்பொழிவு செய்யப் பட்டவர்". "கிறிஸ்து" குறிக்கும் கடவுளின் பணியை அவர் நிறைவேற்றியதனால்தான் இது இயேசுவின் சிறப்புப் பெயராய் வந்தது. இஸ்ராயேல் மக்கள் கடவுளுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட அவர் பெயரால் திருப்பொழிவு செய்யப் பட்டனர். இவ்வடிப்படையில் நிச்சயமாக மெசியாவும், திருப்பொழிவு செய்யப்பட வேண்டியவராக இருந்தார். ஆண்டவர் ஆவியாலே அரசர், குரு, இறைவாக்கினராக திருப்பொழிவு செய்யப்பட வேண்டியிருந்தது. இவ்வாறு இஸ்ராயேலரின் மூவித நம்பிக்கையையும் தம்மில் நிறைவேற்றினார்.

438. இயேசுவினுடைய மெசியாவின் திருப்பொழிவு அவரது பணியை நமக்கு தெளிவுபடுத்துகிறது. கிறிஸ்து என்றால் திருப்பொழிவு செய்யப்பட்டவர். தந்தையே திருப்பொழிவு செய்தவர். மகன் திருப்பொழிவு செய்யப்பட்டவர். ஆவியில் திருப்பொழிவு செய்யப்பட்டவர். இந்த நித்திய திருப்பொழிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசுவின் திருமுழுக்கில் தெளிவாகின்றது. அவரது செயல்களும் வார்த்தைகளும் அவரை "கடவுளின் பரிசுத்தராக" தெளிவாக்குகின்றன.

439. பல யூதரும் சில பிற இனத்தவரும் இயேசுவினது மெசியாவின் அடிப்படைப் பண்புகளை இஸ்ராயேலுக்கு வாக்களிக்கப்பட்ட "தாவீதின் மகனாக" கண்டு கொண்டனர். "மெசியா" என்னும் இச்சிறப்புப் பெயரை இயேசு முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லை. பலர் அவரை அரசியல் மெசியாவாகக் கருதினர்.

440. பேதுருவின் விசுவாச அறிக்கையிலும் மெசியா என்பதை ஏற்றுக் கொண்டவுடன், தான் பாடுபடும் மெசியா என்பதைத் தெளிவுபடுத்துகிறார். தான் மேலிருந்து வந்தவர் என்பதையும் அதேவேளை துன்புறும் ஊழியன் என்பதையும் தெளி வாக்குகிறார். அவரது அரசு அவர் சிலுவையில் உயர்த்தப்படும் போதே வெளிப்படுத்தப்படும்.

## III. இறைவனின் ஒரே மகன்.

441. பழைய ஏற்பாட்டில் "கடவுளின் மகன்" என்னும் அடைமொழி வானதூதர், தெரிந்தெடுக்கப்பட்ட மக்கள், இஸ்ராயேலின் புத்திரர், அவர்களின் அரசர்கள் என்போரைக் குறித்தது. அது மெசியாவுக்குச் சூட்டப்பட்டபோது இதே அடிப்படையில் தான் கூறப்பட்டது.

442. ஆனால் சீமோன் பேதுரு விசுவாச அறிக்கையில் உயிர் வாழும் கடவுளின் மகன், மெசியா என்று சொல்லும் போது அவ்வாறல்ல. ஏனெனில் "எந்த மனிதரும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை. மாறாக விண்ணகத்திலுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் தந்தையே வெளிப்படுத்தினார் "(மத் 16: 16-17) என்று இயேசு கூறுகிறார். ஆரம்பத்திலிருந்தே மெசியா இறைவனின் மகன் என்பது அப்போஸ்தலிக்க விசுவாசத்தின் மையமாக விளங்கியது. முதலில் இது பேதுருவால் அறிக்கையிடப்பட்டது.
(1தெச 1:10 ; யோவா 20:31 ; மத் 16:18)

444. நற்செய்தியில் திருமுழுக்கு, உருமாற்றம் (மத் 3:17, மத் 17:6) ஆகிய இரு இடங்களில் தந்தை இவரை என் அன்பார்ந்த மகன் என்று அழைக்கின்றார் என்றும் இயேசு கடவுளுடைய மகனின் பெயரில் விசுவாசம் கொள்ளக் கேட்கிறார் என்றும் (யோவா 3:18) "அவர் உண்மையாகவே கடவுளின் மகனாகயிருந்தார்" என்று (மாற் 15:39) நூற்றுவத் தலைவன் என்று சான்று பகர்ந்தான் என்றும் குறிக்கப்படுகின்றன. பாஸ்கா நிகழ்வின் போதுதான் "கடவுளின் மகன்" என்பதன் முழு அர்த்தமும் தெளிவாகும்

## IV. ஆண்டவர்

446. எபிரேய மொழியில் "யாவே" என்பது கிரேக்கத்தில் "Kyrios" (கூறியோஸ்) என்றும் தமிழில் ஆண்டவர் என்றும் அழைக்கப்படுகிறது.

447. தி.பா 110ன் கருத்தை பரிசேயரிடம் கேட்கும் போது இந்த அடைமொழியை இயேசு தனக்கு மறைமுகமாகவும், (மத். 22 : 41-46)ல் சீடருடன் பேசும்போது தனக்கு நேரடியாகவும் எடுத்துக் கொள்ளுகின்றார். தனது பகிரங்க வாழ்வின் போதும் தனது இறைத்தன்மையை இயற்கையின்மேல் அதிகாரம், நோய் பிணிகள், சாத்தான், சாவு, பாவம் என்பவற்றின்மேல் காட்டும் போதும் தெளிவாக்குகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

448. நற்செய்தியில் "ஆண்டவர்" என்பது மரியாதைப் பண்பைக் குறிக்கின்றது. சிலவேளைகளில் இறைத் தன்மையைக் குறிக்கின்றது. லூக் 1:43; 2:11 (தூய ஆவியால் தூண்டப்பட்டு...)

449. ஆதித்திருச்சபை இயேசுவை "ஆண்டவர்" என்றழைக்கும் போது தொடக்கத்திலிருந்து தந்தைக்குக் கொடுக்கப்பட்ட வல்லமை, மகிமை என்பன இயேவுக்குரியவை என்றே கருதுகின்றது. ஏனெனில் அவர் இறைவனாகவே இருந்தார். (தி.ப 2:34-35)

## பகுதி 3

## மறைபொருளாகிய கிறிஸ்துவின் வாழ்வு

### I. கிறிஸ்துவின் வாழ்வு முழுவதும் ஒரு மறை பொருள்

### II. இயேசுவின் குழந்தைப் பருவமும் மறைந்த வாழ்வும்

**ஆயத்தங்கள்**

522. இறைமகன் உலகிற்கு வந்த நிகழ்வு எவ்வளவு முக்கியமான தென்றால் இறைவன் அதைப் பல நூற்றாண்டுகளாக ஆயத்தம் செய்தார். அவர் அனைத்தையும் கிறிஸ்துவில் ஒன்று சேரச் செய்தார். எல்லாச் சடங்குகளும் பலிகளும், முற்குறிகளும் முதல் உடன்படிக்கையின் அடையாளங்களே. ஒருவரையொருவர் தொடர்ந்து வரும் இஸ்ராயேலின் இறைவாக்கினர் மூலம் இறைவன் அவரை அறிவித்தார். பிற இனத்தவர் மனதிலும் அவரது வருகைபற்றி மங்கலான ஓர் எதிர்பார்ப்பை ஏற்படுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

523. திருமுழுக்கு யோவான் ஆண்டவரது வருகைக்காக ஆயத்தம் செய்த உடனடி முன்னோடி. இறுதியான இவ் இறைவாக்கினர் இறைவாக்கினர்களுக்கெல்லாம் மேலானவர். அவரே நற்செய்தியை ஆரம்பித்து வைக்கிறார்; தாயின் உதரத்திலிருந்தே கிறிஸ்துவை வரவேற்கிறார்; மண மகனின் நண்பன் என்று மகிழுகின்றார், உலகின் பாவங்களைப் போக்கும் செம்மறியை சுட்டிக்காட்டுகின்றார். தனது போதனை, மனமாற்றத்தின் திருமுழுக்கு, மறை சாட்சியின் மரணம், இவற்றால் கிறிஸ்துவுக்கு சான்று பகருகின்றார்.

524. திருச்சபை திருவருகைக் காலத்தைக் கொண்டாடும் போது, மெசியாவின் வருகைக்காக முற்காலத்து எதிர் பார்ப்புக்களையும் மனக்கண்முன் கொண்டுவருகின்றது. ஏனென்றால் முதல் வருகைக்கான நீண்டகால ஆயத்தத்தில் பங்கு கொள்வதன்மூலம் விசுவாசிகள் அவரது இரண்டாம் வருகைக்கான ஆவலைப் புதுப்பித்துக் கொள்கிறார்கள்.

## கிறிஸ்துவின் பிறப்பு

525. இயேசு எளிய குடும்பத்தில் தீவனத் தொட்டியில் பிறந்தார். சாதாரண இடையர்தான் இப்பிறப்பின் முதற் சாட்சிகள். ஏழ்மையில் விண்ணகத்தின் மாட்சிமை வெளிப்படலாயிற்று.

526. விண்ணரசில் நுழைய குழந்தைகளாக மாறவேண்டும். மத் 18: 3-4. எம்மைத் தாழ்த்தி சிறுவர்களாகவேண்டும். இறைவனின் பிள்ளைகளாவதற்கு மேலிருந்து பிறக்க வேண்டும். எம்மில் கிறிஸ்து உருவாகும்போதுதான் கிறிஸ்து பிறப்பின் மறைபொருள் நிறைவேறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயேசுவின் குழந்தைப் பருவம்

527. இயேசுவின் விருத்தசேதனம் புதிய உடன்படிக்கையின் மக்களான ஆபிரகாமின் வழித்தோன்றல்களுடன் இணைந்து கொள்வதன் அடையாளம். சட்டத்துக்குக் கீழ்ப்படிவோம் என்பதன் அடையாளம் (கலா. 4:4)

528. திருக்காட்சி என்பது இயேசு தன்னை இஸ்ராயேலின் மெசியாவாகவும், இறைமகனாகவும் உலக இரட்சகராகவும் வெளிப்படுத்திய நிகழ்வு. திருக்காட்சிப் பெருவிழா என்பது ஞானிகள் இயேசுவை ஆராதித்தல், யோர்தானில் இயேசுவின் திருமுழுக்கு, கானாவூர் திருமணம் என்பவற்றை உள்ளடக்கும். மனுவுருவாவதன் மூலம் மீட்பை வரவேற்ற பிற இன மக்களை ஞானிகள் பிரதி பலிக்கின்றனர். ஞானிகள் ஜெருசலேமுக்கு ஆராதிக்க வந்தமையானது இஸ்ராயேல் மத்தியில் நாடுகளின் அரசராயிருப்பவரைத் தேடி வந்ததைக் குறிக்கின்றது.

## ஆலயத்தில் ஒப்புக் கொடுத்தமை.

இது இயேசு ஆண்டவரின் முதற்பேறானவர் என்பதைக் காட்டுகின்றது. அன்னா, சிமியோனுடன் முழு இஸ்ராயேலும் மீட்பரைச் சந்திக்கக் காத்திருக்கின்றது. ''பலகாலம் எதிர்பார்க்கப்பட்ட மெசியா'' ''உலகின் ஒளி, ''இஸ்ராயேலின் மாட்சிமை'' அதேவேளை ''எதிர்க்கப்படும் அறிகுறியாகவும்'' இயேசு இருப்பார். மரியாளை ஊடுருவும் என்ற வாள் இயேசு முழுமையான தனித்துவமான பலியாக சிலுவையில் ஒப்புக் கொடுக்கப்படுவார் என்பதையும் இது மக்கள் அனைவரும் காண இறைவன் ஆயத்தம் செய்த மீட்பு என்பதையும் குறிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எகிப்துக்கு ஓடிப்போதல்

530. எகிப்துக்கு ஓடிப்போதலும் மாசற்ற குழந்தைகளின் கொலையும் இருளுக்கும் ஒளிக்குமிடையே ஏற்பட்ட முரண்பாட்டைக் காட்டுகிறது. (யோவான் 1:11) கிறிஸ்துவின் முழுவாழ்வும் துன்பத்தின் மத்தியில் நடைபெற்றது.

இயேசு எகிப்திலிருந்து சென்றது விடுதலைப் பயணத்தை நினைவூட்டி அவரை இறைமக்களுக்கு விடுதலையளிப் பவராகக் காட்டுகிறது.

## இயேசுவின் மறைந்த வாழ்வு

531. இயேசுவின் பெரும் பகுதியான வாழ்வு சாதாரண ஒரு தச்சனின் வாழ்வாகவே இருந்தது. சமய வாழ்வைப் பொறுத்த வரையில் கடவுளின் சட்டத்துக்குப் பணிந்த ஒரு யூதனாக இருந்தார். இந்த முழுக்காலத்தையும் பார்க்கும் பொழுது இயேசு தன் பெற்றோருக்கு "அமைந்து" நடந்தார். அத்துடன் லூக் 2:52 கூறுவது போல "இயேசு ஞானத்திலும் உடல் வளர்ச்சியிலும் மிகுந்து கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்து வந்தார்."

532. இயேசு தம் பெற்றோருக்கு அமைந்து நடந்தது அவர் 4ம் கற்பனையை முழுமையாக நிறைவேற்றியதையும் விண்ணக தந்தைக்குக் காட்டிய அமைச்சலையும் குறிக்கின்றது. நாளாந்தம் இயேசு தம் பெற்றோருக்கு அமைந்து நடந்தது பெரிய வியாழன் அன்று அவர் அமைந்ததை முன் குறித்தது. (லூக் 22:42)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசுவின் நாளாந்த வாழ்வின் அமைச்சல் ஆதாம் தன் கீழ்ப்படியாமையால் இழந்தவற்றை மீளப்பெற்றுக் கொள்வதாய் அமைந்தது.

## இயேசுவைத் தேவாலயத்தில் கண்டுபிடித்தல்.

534. இந்த ஒரே நிகழ்வுதான் இயேசுவின் மறைந்த வாழ்வின் மௌனத்தைக் கலைக்கின்றது. இங்கு இயேசு தனது இறைமகன் என்னும் நிலையிலிருந்து புறப்படும் பணியைக் கண்டு கொள்ளச் செய்கின்றார். "நான் என் தந்தையின் அலுவல்களில்...." லூக் 2:49

மரியாளும் சூசையும் இவற்றை விளங்கிக்கொள்ள வில்லை. ஆனால் விசுவாசத்துடன் ஏற்றுக்கொண்டனர். மரியாள் "இவை அனைத்தையும் தன் உள்ளத்தில் இருத்தி சிந்தித்து வந்தாள்" லூக் 2:17.

## பகுதி 4

## இயேசுக்கிறிஸ்து பாடுபட்டு சிலுவையில் அறையுண்டு, மரித்து, அடக்கம் செய்யப்பட்டமை

571. பாஸ்கா மறைபொருள் எனப்படும் இயேசுக்கிறிஸ்துவின் சிலுவை மரணமும் உயிர்ப்பும் அப்போஸ்தலர்களுடைய நற்செய்தி அறிவிப்பின் மையமாகவும் திருச்சபையின் போதனையாகவும் இருந்தன.

### அலகு 1 - இயேசுவும் இஸ்ராயேலும்

574. இயேசுவின் பகிரங்க வாழ்வின் ஆரம்பத்திலிருந்தே சில பரிசேயர், ஏரோதியரில் சிலர், குருக்கள், சதுசேயர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்போர் சேர்ந்து இயேசுவைத் தொலைக்கத் தீர்மானித்தனர். பேய்களைத் துரத்தல், பாவங்களை மன்னித்தல், ஒய்வு நாளில் குணமாக்கல், சட்டங்களுக்குப் புதுவிதமான விளக்கம் கொடுத்தல், ஆயக்காரர் பாவிகளோடு சேருதல் என்பவற்றால் இவருக்குப் பேய்பிடித்து விட்டது என்று சிலர் நினைத்தனர். தேவ நிந்தையும் போலி இறைவாக்கும் உரைப்பவராக குற்றம் சாட்டப்பட்டார்.

576. பல இஸ்ராயேலர்களின் பார்வையில் இயேசு தெரிந் தெடுக்கப்பட்ட மக்களது நிறுவனத்தின் அடிப்படைகளுக் கெதிராக செயல்பட்டார். அதாவது -

1. எழுத்திலிருந்த சட்டங்களுக்கு அமையாதவை; வாய் மொழியாக வந்த சட்டங்களுக்கு விளக்கம்.
2. பரிசுத்த இடமாக விளங்கும் ஜெருசலேம் ஆலயம், அங்கு சிறப்பான முறையில் இறைவனின் பிரசன்னம்.
3. ஒரே கடவுளில் விசவாசம். அவரது மகிமையில் எந்த மனிதனும் பங்கு கொள்ள முடியாது.

## I. இயேசுவும் சட்டமும்.

577. மலைப் பொழிவின் ஆரம்பத்தில் சட்டத்தின் புதிய விளக்கத்தைக் கொடுத்தார். மத் 5:17-19

578. இயேசு இஸ்ராயேலின் மெசியா என்ற முறையில் சட்டங்களை முழுமையாக நிறைவேற்றுபவராக வருகிறார். அவர் ஒருவரே அவ்வாறு நிறைவேற்ற முடியும். சட்டத்தை முழுமையாகக் கடைப்பிடிக்க முடியாதென்பதை யூதர் ஏற்றுக் கொண்டனர். இதனால்தான் ஆண்டுக்கொரு முறை பாவப்பரிகாரப்பலி ஒப்புக் கொடுக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

580. இறைச் சட்டத்தைக் கொடுத்த ஒருவர்தான் அதை முழுமையாக நிறைவேற்ற முடியும். இயேசுவில் சட்டம் கற்பலகையிலல்ல, மக்களின் உடன்படிக்கையாக வந்த ஊழியனின் இதயத்தில் எழுதப்பட்டுள்ளது.

581. இயேசு சட்டத்தை ஒழிக்கவில்லை. மாறாக அதற்கு இறைவனின் இறுதிச் சந்தர்ப்பத்தைக் கொடுத்து நிறை வேற்றுகின்றார். மத் 5:33-34. அதே இறை அதிகாரத்துடன் "கடவுளின் வார்த்தையைப் பயனற்றதாக்குகின்றார்" காண் மாற் 7:13. பரிசேயரின் மனித பாரம்பரியங்களை மீறினார்.

582. இயேசு இறை விளக்கத்தைக் கொடுத்து சட்டங்களை நிறைவு செய்கிறார். மாற் 7:18-21.

## II. இயேசுவும் ஆலயமும்

583. தனக்கு முந்திய இறைவாக்கினர்போன்று இயேசுவும் ஜெருசலேம் ஆலயத்துக்கு அதிக மதிப்புக் கொடுத்தார். ஆலயத்தில் காணிக்கையாக ஒப்புக் கொடுக்கப்பட்டமை. 12 வயதில் ஆலயத்தில் தங்கி தந்தையின் காரியத்தில் ஈடுபட்டமை, ஒவ்வொரு வருடமும் பாஸ்கா திரு விழாவுக்குச் சென்றமை.

584. இயேசு தந்தையைச் சந்திக்கும் இடமாகவே ஆலயத்தைக் கருதினார். இயேசுவுக்கு ஆலயம் தந்தையின் இடம், செப வீடு. அதை வாணிபக் கூடமாக்கியதால் கோபமடைந்தார். தந்தைமீதுள்ள ஆர்வத்தினால் வியாபாரம் செய்வோரை விரட்டினார். யோவான் 2:16-17.

585. தனது பாடுகளுக்குமுன் ஜெருசலேம் ஆலயத்தின் அழிவு பற்றி முன் அறிவிக்கின்றார். இவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவித்ததின் மூலம் தனது பஸ்காவோடு ஆரம்பமாகும் ஒரு அடையாளத்தை முன்னறிவிக்கின்றார். ஆனால் இது தவறாகப் பொருள் கொள்ளப்பட்டு அவரது கொலைத் தீர்ப்புக்கான சாட்சியமாகச் சொல்லப்படும்.

586. இயேசு ஆலயத்துக்கு எதிரானவரல்ல. மாறாக ஆலய வரி செலுத்தினார். அவர் தன் உடலை ஆலயத்தோடு ஒன்றுபடுத்திப் பேசினார். யோவான் 2:21. அவரைக் கொல்லுவதன் மூலம் அதாவது இயேசு என்னும் ஆலயம் அழிக்கப்படுவதன் மூலம் மீட்பின் வரலாற்றில் புதிய யுகம் உண்டாகும். யோவான் 4:21.

## III. இயேசுவும் இஸ்ராயேல் மக்களது ஒரே கடவுளின் விசுவாசமும்

587. சட்டமும் ஆலயமும் இயேசுவுக்கு எதிர்ப்பின் சந்தர்ப்பங்களென்றால், பாவங்களை மன்னிப்பது அதைவிடக் கூடுதலான சவாலாக இருந்தது.

588. ஆயக்காரரோடும் பரிசேயரோடும் இயேசு உணவருந்தியது பரிசேயருக்கு இடறலாயிருந்தது. இயேசு "நான் நேர்மையாளரையல்ல, பாவிகளையே அழைக்க வந்தேன்" மத் 9:13 என்றார். எல்லோரும் பாவிகள் என்பதால் மீட்புத் தேவையில்லை என்பவர்கள் குருடர்கள் என்றுரைத்தார்.

589. யோவான் 8:33-36 இயேசு பாவிகள் மட்டில் தனது இரக்கத்தை கடவுளுடைய இரக்கத்தோடு சமனாக்கியது மாபெரும் இடறலாயிருந்தது. அவர்களோடு பந்திய மர்ந்ததை அவர்கள் இறையரசின் பந்திக்கு அனுமதிக்கப் படும் செயலாகக் கருதினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கடவுளைத் தவிர வேறு எவரும் பாவத்தை மன்னிக்க முடியாது" என்றே சாதித்தனர். பாவங்களை மன்னிப்பதன் மூலம் ஒன்றில் அவர் கடவுளை நிந்திக்கிறார். அல்லது உண்மையைச் சொல்லி தன்னிலே இறைவனைப் பிரசன்னமாக்கி அவரது பெயரை வெளிப்படுத்துகிறார்.

590. இயேசுவின் இறைத்தன்மை ஒன்றுதான் அவரது பின்வரும் வாக்கியங்களை நியாயப்படுத்த முடியும். "என்னோடு இல்லாதவன் எனக்கெதிராய் இருக்கிறான்"; "யோனாவை விட மேலானது... சலோமோனை விட மேலானது இங்கே உண்டு"; "ஆபிரகாமுக்கு முன் நான் இருக்கிறேன்"; "நானும் தந்தையும் ஒன்று"

591. தன்னிலே விசுவாசம் கொள்ளும்படி இயேசு கேட்கிறார். இயேசுவின் வார்த்தைகளை தெய்வ நிந்தனை எனவும் சாவுக்குரிய குற்றமெனவும் செபக்கூடத்திலிருந்தோர் தீர்மானித்தனர்.

653. இயேசுவின் இறைத்தன்மை உயிர்ப்பினால் நிரூபிக்கப் படுகிறது. யோவா. 8:28; தி.பா.13:32,34
கிறிஸ்துவின் உயிர்ப்பு மனுவுருவாதலோடு நெருங்கிய தொடர்புள்ளது. இவ்வாறு அது இறை திட்டத்தின் நிறைவாகவுள்ளது.

654. பாஸ்கா மறைபொருள் இரண்டு அம்சங்களைக் கொண்டுள்ளது.
தமது இறப்பினால் கிறிஸ்து பாவங்களிலிருந்து உலகை விடுவிக்கிறார். உயிர்ப்பினால் புதுவாழ்வின் வழியைத் திறந்து விடுகிறார். இப் புதுவாழ்வு எம்மை இறை அருளில் நிலை நிறுத்தும் மீட்பு. மீட்பு பாவத்தினால் உண்டான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவின் மேல் வெற்றியைத் தருகிறது. அத்தோடு அருளிலே புதிய பங்கைத் தருகிறது. இவ் அருள்தான் நாம் கிறிஸ்துவின் சகோதரர்களாவதற்கு வேண்டிய பிள்ளைகளுக்கான சுவீகாரத்தைத் தருகிறது. "சென்று என் சகோதரர்களுக்கு அறிவியுங்கள்"என்று இயேசு கூறுகிறார். நாம் இயற்கையாலல்ல, இறையருளால்தான் சகோதரர்களாயிருக்கிறோம்.

655. கிறிஸ்துவின் உயிர்ப்பு எமது உயிர்ப்புக்குக் காரணமும் ஊற்றுமாக இருக்கின்றது. 1 கொரி 15:20-22.
உயிர்த்த கிறிஸ்து விசுவாசிகள் தம் நிறைவை எதிர்பாத்திருக்கும்போது அவர்களது உள்ளங்களில் வாழ்கிறார்.
கிறிஸ்துவில் கிறிஸ்தவர்கள் "வரப்போகும் யுகத்தின் வல்லமையை சுவைக்கின்றார்கள்" எபி 6:5. அவர்கள் இனிமேல் தங்களுக்கென வாழாமல் தங்களுக்காக இறந்து உயிர்த்தெழுந்தவருக்காக வாழவேண்டும் என்பதற்காகவே அவர் அனைவருக்காகவும் இறந்தார்.

## பகுதி 5

## பாதாளத்தில் இறங்கி மூன்றாம் நாள் மரித்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார்.

### அலகு 1 - கிறிஸ்து பாதாளத்தில் இயங்கியமை

### அலகு 2 - உயிர்ப்பு வரலாறு வரலாறு கடந்த நிகழ்வு

### I. உயிர்ப்பின் வரலாறு வரலாற்றைக் கடந்த நிகழ்வு

639. உயிர்ப்பு புதிய ஏற்பாடு சான்றுபகர்வதுபோன்று வரலாற்றால் நிரூபிக்கக்கூடிய நிகழ்வு. 1 கொரி 15:3-4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலியான கல்லறை

640. காலியான கல்லறை தன்னிலே இயேசுவின் உயிர்ப்பை நிரூபிக்க முடியாது. அதேவேளை இது இயேசுவின் உயிர்ப்புக்கு முக்கிய சான்று. இதுதான் சீடருக்குக் கிடைத்த முதல் சான்று. பரிசுத்த பெண்கள் பேதுரு போன்றவர்களுக்கு ஏற்பட்ட அனுபவம்.
யோவா 20:2,6,8... விசுவசித்தார். இது மனித செயலல்ல.

## சாட்சிகள்

641. உயிர்த்த இயேசுவை முதலில் சந்தித்தவர் மரிய மதலேனாள். அடுத்து பேதுருவும் பன்னிருவரும் சந்தித்தனர்.

642. பேதுருவும் பன்னிருவரும் "முதன்மையான சாட்சிகள்". இவர்களது சாட்சியத்தில்தான் முதல் குழுமத்தின் விசுவாசம் தங்கியுள்ளது. இவர்கள் மட்டுமன்று ஐநூறுக்கு மேற்பட்டோருக்கு இயேசு காட்சி கொடுத்ததாக பவுல் கூறுகிறார். 1 கொரி 15:4-8
உயிர்த்த இயேசுவைக் கண்டவர்களில் பலர் உடனே நம்பவில்லை.

## உயிர்த்த கிறிஸ்துவின் மனித நிலை

645. தன்னைத் தொட அனுமதிப்பதாலும், உணவைப் பகிர்ந்து கொள்வதாலும் சீடருடன் நேரடித்தொடர்பு கொள்கிறார். இவ்வாறு, தான் ஆவியல்ல, பாடுகளின் தழும்புகளைக் கொண்டவர் என்பதை எண்பிக்கின்றார். அதேவேளை மகிமைக்குரிய உடலின் புதிய பண்புகளையும் கொண்டுள்ளார். காலம், இடத்தைக் கடந்து விரும்பிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்தில் பிரசன்னமாகக் கூடியவராகிறார். இவற்றால் அவர்களது விசுவாசத்தை உறுதிப்படுத்துகிறார்.

646. கிறிஸ்துவின் உயிர்ப்பு பழைய உலக வாழ்வுக்கு வருவதல்ல. ஜயீரின் மகள், நயீம் பெண்ணின் மகன், லாசர் என்போர் அற்புதமாக இயேசுவால் உயிர்ப்பிக்கப் பட்டவர்கள், ஆனால் அவர்கள் மீண்டும் இறப்பார்கள். ஆனால் கிறிஸ்துவின் உயிர்ப்பு வித்தியாசமானது. அது சாவின் நிலையைத் தாண்டி காலம், இடம் கடந்தது.

## உயிர்ப்பு வரலாற்றைக் கடந்த நிகழ்வு

647. உயிர்ப்பின் நிகழ்வை எவரும் நேரடியாகக் காணவில்லை. எந்த நற்செய்தியாளரும் விவரிக்கவுமில்லை. காலியான கல்லறையும், சந்தித்த அப்போஸ்தலர்களும் சாட்சியம் கூறினாலும் அடிப்படையாக விசுவாசத்தைச் சார்ந்ததும் வரலாற்றைக் கடந்ததுமாக உள்ளது. இதனால்தான் உயிர்த்த கிறிஸ்து உலகத்துக்கு தன்னைக் காண்பிக்காது, தனது சீடர்களுக்கு மட்டுமே காண்பிக்கிறார். தி.பா 13:31

## உயிர்ப்பின் அர்த்தமும் மீட்புக்கு அதன் முக்கியத்துவமும்

651. 1கொரி 15:14 கிறிஸ்துவின் சொல், செயல் அனைத்தையும் உயிர்ப்பு நிரூபிக்கின்றது. மனித புத்தியால் விளங்க முடியாத காரியங்களைக்கூட கிறிஸ்து தனது உயிர்ப்பினாலும் தனது இறைவல்லமையாலும் நிரூபிக்கின்றார்.

652. பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்டவைக்கும் இயேசு இவ்வுலக வாழ்வில் சொன்னவற்றிற்கும் உயிர்ப்பு ஒரு நிரூபணமாக அமைகின்றது. இது மறைநூலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதியுள்ளவாறு என்றும் கிறிஸ்துவின் உயிர்ப்பு முன் கூறப்பட்டவற்றை நிறைவு செய்கிறது என்றும் பொருள்படும்.

## IV. காலத்தின் நிறைவில் கிறிஸ்துவின் ஆவி. யோவான் இயேசுவின் முன்னோடி - இறைவாக்கினர் - திருமுழுக்காளர்.

717. யோவான் தாயின் உதரத்திலேயே தூய ஆவியால் நிரப்பப்பட்டிருந்தார்.

718. ஆவியின் அக்கினி அவரில் தங்கியிருந்து அவரை ஆண்டவரின் முன்னோடியாக்கியது. ஆண்டவருடைய வருகைக்கு ஆயத்தம் செய்யும் பணியை ஆவியானவர் யோவான் மூலம் நிறைவு செய்தார்.

719. யோவான் இறைவாக்கினரைவிட மேலானவர். இறைவாக்கினர் மூலம் பேசும் பணியை யோவானில் ஆவியானவர் நிறைவு செய்கிறார். அவர் ஒளிக்குச் சாட்சியம் சொல்ல வந்தவர்.

720. இறுதியாக திருமுழுக்கு யோவானில் தூய ஆவியானவர் மனிதனை இறைவனின் சாயலுக்குக் கொண்டுவரும் பணியை ஆரம்பிக்கிறார். இப்பணியைத்தான் நாம் கிறிஸ்துவிலும் கிறிஸ்துவோடும் அடைந்து கொள்வோம். யோவனின் திருமுழுக்கு மனமாற்றத்திற்கானது. நீரினாலும் ஆவியினாலும் உண்டாவது ஒரு புதுவாழ்வு.

## அருள் நிறைந்தவளே! அகமகிழும்.

721. மரியாள் மகனுடையவும் ஆவியினுடையவும் பணியின் காலத்தின் முழுமையில் வந்த சிறந்த கைவேலைப்பாடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல்முறையாக மகனும் தூய ஆவியும் தங்கக்கூடிய இடத்தை தந்தை கண்டார்.

722. தூய ஆவி மரியாளை அருளால் ஆயத்தம் செய்தார். ஆண்டவர் தங்கும் இடம் அருள் நிறைந்ததாய் இருப்பது அவசியம். அருளால்தான் சென்மபாவ மாசு எதுவுமின்றி உற்பவித்தாள். கபிரியேல் தூதர் சியோனின் மகளாக அவளை வாழ்த்தியது பொருத்தமே.

723. மரியாளில் தூய ஆவி தந்தையின் அன்புத் திட்டத்தை நிறைவு செய்கிறார். தூய ஆவிமூலமாக மரியாள் கருத்தரித்து இறைமகனைப் பெற்றெடுக்கிறாள். தூய ஆவியின் வல்லமையாலும் அவளது விசுவாசத்தாலும் அவளது கன்னிமை தனித்துமான விதத்தில் பலனளித்தது.

724. மரியாளில் தூய ஆவியானவர் தந்தையின் மகனாயிருந்து இப்பொழுது கன்னியின் மகனானவரை வெளிப்படுத்துகிறார். தூய ஆவியால் நிரப்பப்பட்டு வார்த்தையானவரை தாழ்ச்சி மிகு அவரது உடலிலே வெளிப்படுத்துகிறாள். ஏழை இடையர்களும் பிற இனத்தவர்களுமே அவரை முதலில் அறியச் செய்கின்றனர்.

725. இறுதியாக மரியாள் மூலம் தூய ஆவி மக்களை கிறிஸ்துவோடு உறவு கொள்ளச் செய்கின்றார். இடையர், ஞானிகள், சிமியோன், அன்னா போன்ற தாழ்ச்சியுள்ளம் கொண்டோரே முதலில் அவரை ஏற்றுக்கொள்ளகின்றவர் களாகின்றனர்.

726. ஆவியின் இப்பணியின் இறுதியில் மரியாள் புதிய ஏவாளாய் (வாழ்வோரின் தாயாக), கிறிஸ்துவின் தாயாக வருகின்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகாரம் 3

## தூய ஆவியை விசுவசிக்கிறேன்

## அலகு 3
## ஏக, பரிசுத்த கத்தோலிக்க, அப்போஸ்தலிக்க திருச்சபை

### I. ஏக திருச்சபை

813. திருச்சபை அதனது ஊற்றின் காரணத்தினால் ஒன்று. மூன்று ஆட்களான ஒரே கடவுள் அதை நிறுவிய காரணத்தினால் திருச்சபை ஒன்று. இயேசு மக்கள் அனைவரையும் ஒரே மக்களாகவும் ஒரே உடலாகவும் ஆக்கினார். திருச்சபை அதனது ஆன்மாவால் ஒன்று. அதாவது தூய ஆவி அவரே உன்னத ஒற்றுமையைக் கொண்டு வருகிறார்.

814. ஆரம்பத்திலிருந்து இந்த ஒரே திருச்சபை பல வித்தியாசங்களைக் கொண்டிருக்கிறது. ஏனென்றால் இறைவனின் வரங்கள் வித்தியாசமானவை. அவற்றைப் பெறும் மக்களும் வேறுபட்டவர்கள். ஒரே திருச்சபைக்குள் பல்வேறுபட்ட மக்கள் இருக்கின்றார்கள். இந்த வேற்றுமை திருச்சபையின் ஒற்றுமைக்கு எதிரானதல்ல. ஆனால் பாவமும் அதன் தாக்கமும் இந்த ஒற்றுமையைப் பாதிப்பதாக அமைகின்றது.

815. இந்த ஒற்றுமையின் பந்தனங்கள் என்ன? அனைத்திற்கும் மேலாக பிறர் அன்பு; அதேவேளை வெளிப்படையான பந்தனங்கள்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போஸ்தலர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட ஒரே விசுவாசம்

பொதுவான வழிபாட்டுக் கொண்டாட்டங்கள், குறிப்பாக அருட்சாதனங்கள்

திருஆட்சி மூலமாக வரும் அப்போஸ்தலிக்க தொடர்ச்சி.

## ஒற்றுமைக்கு எதிரான பாதிப்புக்கள்

817. இறைவனின் இந்த ஒரே திருச்சபை ஆரம்பகால முதல் ஒற்றுமைக்கெதிரான பாதிப்புக்களை அனுபவித்தது. அதைத் தொடர்ந்த காலங்களில் பெருமளவில் மக்கள் திருச்சபையை விட்டுப் பிரிந்தனர். இரு பக்கத்திலுமே தவறுகள் உண்டு.

818. பிரிந்த சமூகங்களுக்குள் பிறக்கின்றவர்களை இன்று நாம் குறை கூற இயலாது. திருச்சபை இன்று தனது சகோதர பாசத்தை அவர்களுக்குக் காட்டுகிறது. திருமுழுக்குப் பெற்றவர்கள் அனைவரும் கிறிஸ்துவோடு இணைக்கப்பெற்று கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப் படுகிறார்கள்.

819. இறைவார்த்தை, அருள்வாழ்வு, விசுவாசம், நம்பிக்கை, அன்பு, தூய ஆவியின் கொடைகள் போன்ற பலதரப் பட்ட உண்மைகளும் புனிதத்தன்மையும் வெளிப்படையான கத்தோலிக்க திருச்சபைக்கு அப்பாலும் உண்டு. கிறிஸ்துவின் ஆவி இச்சபைகளையும் கிறிஸ்தவ குழுமங்களையும் மீட்பின் வழிகளாய்ப் பயன்படுத்துகின்றார்.

## ஒற்றுமையை நோக்கி

820. ஆரம்பதிலிருந்தே கிறிஸ்து திருச்சபைக்கு ஒற்றுமையைக் கொடுத்துள்ளார். இது இழக்க முடியாத ஒன்றாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சபைக்கு உள்ளது. இறுதிவரைக்கும் திருச்சபை இதைப் பாதுகாக்கும் என நம்புகிறோம். திருச்சபை எந்நாளும் இவ் ஒற்றுமையைப் பாதுகாக்க முயல வேண்டும். இந்த ஒற்றுமைக்காகவே கிறிஸ்துவும் மன்றாடினார். யோவா 17:21

822. இவ் ஒற்றுமையைப் பாதுகாக்க வேண்டியது திரு நிலையினர், பொது நிலையினர் அனைவரதும் கடமை. இவ் ஒற்றுமையை உருவாக்குவது மனித பெலத்திற்கு அப்பாற்பட்டது. இவ் ஒற்றுமையை உருவதற்குவதற்கான பெலம் திருச்சபைக்காக கிறிஸ்துவின் செபம், தந்தையின் அன்பு, தூய ஆவியின் வல்லமை என்பவற்றில் தங்கியுள்ளது.

## II. பரிசுத்த திருச்சபை

823. திருச்சபை என்றும் பரிசுத்தமானது. கிறிஸ்து தனது அன்புப் பத்தினியாக அதை நேசித்து அதற்காக தன்னையே கொடுக்கிறார். அதைத் தூயதாக்கி தன்னுடன் இணைக்கிறார். தூய ஆவியைப் பொழிகிறார்.

824. கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டு அது பரிசுத்தமாகிறது. அவர் வழியாகவும் அவரோடும் சேர்ந்து பரிசுத்தமாக்கும் திருச்சபையாகிறது.

825. இவ்வுலகிலுள்ள திருச்சபை குறையுள்ள, ஆனால் உண்மையான தூய திருச்சபையாயிருக்கிறது. திருச்சபை உறுப்பினரில் இப்பரிசுத்தம் இன்னும் அடையப்பட வேண்டிய ஒன்றாக உள்ளது. எந்தெந்த நிலையில் இருந்தாலும் ஒவ்வொரு உறுப்பினரும் இந்தப் பரிசுத்த தனத்திற்கு அழைக்கப்படுகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

826. பிறர் அன்புதான் இப்பரிசுத்ததனத்தின் ஆன்மா போன்றது.

827. திருச்சபையின் பணியாளர்கள் உட்பட சகல உறுப்பினர்களும் தாம் பாவிகள் என்பதை ஏற்க வேண்டும். ஒவ்வொரு உறுப்பினரிலும் பாவமும் பரிசுத்த தனமும் சேர்ந்தே இருக்கின்றன. இவ்வாறு கிறிஸ்துவின் மீட்புக்குள் ஈர்க்கப்பட்டு பரிசுத்த தனத்தின் பாதையில் செல்லும் உறுப்பினர்களை திருச்சபை ஒன்று சேர்க்கிறது.

828. சில விசுவாசிகளைப் புனிதராக்குவதன் மூலம் திருச்சபை தன்னுள் இருக்கும் புனிதத்தன்மையை ஏற்று, அப்புனிதர்களை சிறந்த மாதிரிகளாகவும் பரிந்து பேசுபவர்களாகவும் இருக்கிறார்கள் என்ற நம்பிக்கையை கொடுக்கிறது.

829. திருச்சபை புனித கன்னிமரியாளில் இப்பரிசுத்த தனத்தின் நிறைவைக் கண்டுள்ளது. அவள் எந்தப் பாவ மாசுமின்றி இருக்கின்றாள் என்ற நம்பிக்கையோடு அவளைப் பார்க்கின்றது.

## III. கத்தோலிக்க திருச்சபை

### நற்செய்தி அறிவிப்பு கத்தோலிக்க திருச்சபைக்கு அவசியமானது

849. முழு உலகினதும் மீட்பின் அடையாளமாக ஏற்படுத்தப் பட்ட திருச்சபை, அதன் நிறுவுனரது கட்டளைப்படியும் தனது இயல்புப்படியும் மக்கள் அனைவருக்கும் நற்செய்தியை அறிவிக்க முயற்சிக்கின்றது. மத் 28:19-20.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நற்செய்தி அறிவிப்பின் ஆரம்பமும் நோக்கமும்

850. ஆண்டவரின் நற்செய்தி அறிவிப்புக்கான பணிப்பு மூவொரு இறைவனின் அளவற்ற அன்பிலேயே தங்கியுள்ளது. நற்செய்தி அறிவிப்பின் இறுதி நோக்கம் மக்கள் அனைவரும் மூவொரு கடவுளின் வாழ்வில் பங்கு பற்றுவதாகும்.

## நற்செய்தி அறிவிப்பின் நோக்கம்.

851. மக்கள் அனைவரும் மீட்படையவே இறைவன் விரும்புகின்றார். அதாவது உண்மையின் அறிவைப் பெற வேண்டும் என்று விரும்புகிறார். உண்மையின் ஆவியின் தூண்டுதலுக்குப் பணிகின்றவர்கள் மீட்பின் வழிக்கு வருகின்றார்கள். திருச்சபையிடம் இவ் உண்மை ஒப்படைக்கப்பட்டிருப்பதால் இவர்களை நிறை உண்மைக்கு கொண்டுவர திருச்சபை முயற்சிக்கின்றது.

## நற்செய்தி அறிவிப்பின் வழிகள்

852. தூய ஆவியே முக்கியமானவர். அவரே திருச்சபையை நற்செய்தி அறிவிப்பின் பாதையில் வழிநடத்துகிறார். கிறிஸ்து சென்ற பாதையிலே ஏழ்மை, அமைச்சல், தன்னல மறுப்பு என்னும் வழிகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

854. நற்செய்தி அறிவிப்பு ஆர்வத்துக்கு பொறுமை அவசியம். கிறிஸ்துவில் விசுவாசம் கொள்ளாத மக்களுக்கும் குழுக்களுக்கும் நற்செய்தியை அறிவிக்க வேண்டும். அதைத் தொடர்ந்து கிறிஸ்துவின் பிரசன்னத்தைக் காட்டும் கிறிஸ்வ குழுக்களை ஏற்படுத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## IV. அப்போஸ்தலிக்க திருச்சபை

857. அப்போஸ்தலர்மீது கட்டப்பட்டிருப்பதால் இது அப்போஸ்தலிக்க திருச்சபை எனப்படுகிறது. இதை மூன்று விதங்களில் பார்க்கலாம்:

1. கிறிஸ்துவினால் நற்செய்திப் பணிக்கு அனுப்பப்பட்ட அப்போஸ்தலர் மீது கட்டப்பட்டது.
2. தன்னுள் குடிகொண்டிருக்கும் தூய ஆவியினால் போதிக்கும் பணியை அது தொடர்ந்து பாதுகாத்து வருகின்றது. 2 திமோ 1:13-14.
3. கிறிஸ்து மீண்டும் வரும்வரை அப்போஸ்தலர்களின் வழித்தோன்றல்களான திருத்தந்தை, ஆயர்கள் குழுமத்தினால் போதிக்கப்பட்டு, புனிதப்படுத்தப்பட்டு, வழிநடத்தப்படுகின்றது.

### அப்போஸ்தலர்களது பணி

858. இயேசு தந்தையால் அனுப்பப்பட்டவர். அவர் தம்மோடு இருக்கவும் தூதுரைக்கவும் அப்போஸ்தலர்களைத் தேர்ந்தெடுத்தார். இவ்வாறு அப்போஸ்தலர்களிலே தமது பணியை கிறிஸ்து தொடர்கின்றார். மத். 10:40

859. இயேசு தான் கொடுக்கும் பணிகளை தன் தந்தையிடமிருந்து பெற்ற பணிகளோடு இணைக்கிறார். யோவா 5:19,30. தந்தையைப் பிரிந்து தான் எதுவும் செய்ய இயலாதது போல, தன்னைப் பிரிந்து அப்போஸ்தலர்களும் எதுவும் செய்ய இயலாது. கிறிஸ்துவிடமிருந்தே பணிக்கான கட்டளையையும் அதற்கு வேண்டிய வல்லமையையும் பெறுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

860. அப்போஸ்தலர்களில் மற்றவர்களிடம் கையளிக்கப்பட முடியாத அம்சம் ஒன்று உண்டு. அது இயேசுவின் உயிர்ப்புக்கு சாட்சிகளாயிருப்பதும்; திருச்சபைக்கு அடித்தளமாயிருப்பதும் ஆகும். அவர்களிடம் ஒப்படைக்கப் பட்ட பணி "இறுதிவரை தொடரும்" மத். 28:20.

## ஆயர்கள் - அப்போஸ்தலர்களின் வழித்தோன்றல்கள்

861. தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பணியைத் தம்முடைய இறப்புக்குப்பின் தொடரவும், அதை நிறைவு செய்யவும் தம்முடைய துணையாளர்களைத் தெரிந்தெடுத்தனர். இவர்களும் அதேபோன்று தமது இறப்புக்குப் பின் தமது பணியை பொருத்தமானவர்கள் தொடரச் செய்ய வேண்டும்.

862. ஆயர்கள் இறைவனின் ஏற்பாட்டால் அப்போஸ்தலர்களின் இடத்தை திருச்சபையின் ஆயர்கள் என்ற முறையில் வகிக்கின்றார்கள் என திருச்சபை போதிக்கின்றது. எனவே, அவர்களுக்குச் செவிமடுப்பவர்கள் கிறிஸ்துவுக்கே செவிமடுக்கிறார்கள். அவர்களை நிராகரிப்பவர்கள் கிறிஸ்துவையும் அவரை அனுப்பியவரையும் நிராகரிக்கின்றனர்.

## அப்போஸ்தலத்துவம்

863. புனித பேதுருவும் அவரோடு சேர்ந்த அப்போஸ்தலர்களுடன் இணைந்திருப்பதன் மூலமாக முழுத்திருச்சபையும் அப்போஸ்தலிக்க திருச்சபையாக இருக்கின்றது. அது முழு உலகிற்கும் அனுப்பப்படுகிறது. சகல உறுப்பினர்களும் வெவ்வேறு விதங்களில் திருச்சபையின் பணியில் பங்குபற்றுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

864. தந்தையால் அனுப்பப்பட்ட கிறிஸ்து திருச்சபையினது முழு அப்போஸ்தலத்துவத்தின் ஊற்றாக இருக்கிறார். திருப்பொழிவு செய்யப்பட்ட திருநிலையினரோ, பொது நிலையினரோ கிறிஸ்துவில் தங்கியிருக்குமளவுக்கே பலனளிப்பர். காலத்தின் தேவைக்கும், ஆவியானவரின் வரங்களுக்கும் ஏற்ப பணிகள் வேறுபடுகின்றன. ஆனால் நற்கருணையிலிருந்து ஊற்றெடுக்கும் அன்பே அப்போஸ்தலத்துவத்தின் ஆன்மா போன்றுள்ளது.

865. இவ்வாறு திருச்சபை ஏக, பரிசுத்த, கத்தோலிக்க, அப்போஸ்தலிக்க திருச்சபையாக இருக்கிறது.

## அலகு 4

## பாவமன்னிப்பை ஏற்றுக் கொள்ளுகிறேன்

### I. பாவமன்னிப்புக்கான ஒரே திருமுழுக்கு

977. நமது ஆண்டவர் பாவமன்னிப்பை விசுவாசத்துடனும் திருமுழுக்குடனும் இணைத்துள்ளார். மாற் 16:15-16. திருமுழுக்கே பாவமன்னிப்புக்கான முதலும் முக்கியமானதும் ஆகும். ஏனெனில் இதுதான் எமது பாவங்களுக்காக மரித்து, எமது மீட்புக்காக உயிர்த்த கிறிஸ்துவோடு நம்மை இணைக்கின்றது. இவ்வாறு நாமும் புதுவாழ்வு பெற்றவர்களாய் வாழுகின்றோம்.

978. திருமுழுக்குப் பெற்றபோது நாம் செய்த விசுவாச அறிக்கை எமது பாவங்களைக் கழுவியது. அது எவ்வளவு நிறைவுள்ளதென்றால் அது எமது சென்ம பாவத்தையும் கன்மபாவத்தையும் போக்கி பாவங்களுக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிகாரத்தையும் நீக்கியது. ஆனால் அது இயற்கையின் பெலவீனங்களிலிருந்து எம்மை விடுவிக்கவில்லை. நம்மைத் தீமைக்கு இட்டுச் செல்லும் இச்சைகளுக் கெதிராக நாம் தொடர்ந்து போராடவே வேண்டும்.

978. தீமைகளுக்கான எமது இச்சைகளுடனான போராட்டத்தில் நாம் பாவத்தின் தாக்கத்திலிருந்து விடுபட விழிப்பாகவும் துணிவாகவும் இருக்கலாம். திருச்சபை பாவங்களை மன்னிக்கும் அதிகாரத்தைக் கொண்டிருக்கிறதென்றால், திருமுழுக்கு மட்டும் ஒரே வழியாக இருக்க முடியாது. மனித வாழ்வின் இறுதி நேரம்வரை செய்யப்படும் பாவங்களுக்கு மன்னிப்பு இருக்க வேண்டும்.

980. பாவமன்னிப்பு என்னும் திருவருட்சாதனம் மூலமாகவே திருமுழுக்குப் பெற்றவர்கள் இறைவனோடும் திருச் சபையோடும் ஒப்புரவாகின்றனர்.

## II. திறவுகோலின் வல்லமை

981. தனது உயிர்ப்பின் பின் கிறிஸ்து தனது சீடர்களை அனுப்பி, அனைத்து மக்களுக்கும் பாவமன்னிப்புக்கான மனந்திரும்புதலை தனது பெயரால் அறிவிக்கும்படி செய்தார். அப்போஸ்தலர்களும் அவர்களது வழி வந்தோரும் இந்த ஒப்புரவுப் பணியை, பாவமன்னிப்பை அறிவித்து விசுவாசத்துக்கும் மனமாற்றத்துக்கும் அழைப்பதன் மூலம் செய்யும் ஒப்புரவின் மூலமாகவும் தொடருகின்றனர்.

982. திருச்சபையால் மன்னிக்கப்பட முடியாத கனாகனமான பாவம் எதுவுமில்லை. நமது பாவங்களுக்காக இறந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்து, தனது பாவத்திலிருந்து மனந்திரும்பும் எவருக்கும், திருச்சபையின் மன்னிப்பின் கதவுகள் அகலத் திறந்திருக்க வேண்டுமென ஆசிக்கின்றார்.

983. பாவமன்னிப்பு உயிர்த்த கிறிஸ்து திருச்சபைக்குக் கொடுத்த மாபெரும் கொடை. அப்போஸ்தலர்களும் அவர்களது வழிவந்தோரும் பாவங்களை மன்னிக்கப் பெற்றிருக்கும் பணிப்பையும் அதிகாரத்தையும் விசுவாசிகள் தமது உள்ளத்தில் என்றும் புதுப்பித்து வளர்க்க வேண்டுமென திருச்சபை ஆசிக்கின்றது.

## அலகு 5

## I. உடலின் உயிர்ப்பையும் விசுவசிக்கிறேன்.

## II. இயேசுக் கிறிஸ்துவில் இறத்தல்

### இறப்பு

1006. உடல் ரீதியான இறப்பு சாதாரணமானது. ஆனால் கிறிஸ்துவின் அருளில் இறப்பவர்களுக்கு அது ஆண்டவரின் இறப்பில் பங்கு கொள்வதாகும். இதனால் அவர்கள் ஆண்டவரின் உயிர்ப்பிலும் பங்கு கொள்ளுகின்றனர்.

1007. இறப்பு இவ்வுலக வாழ்வின் முடிவு. நாம் ஒரு குறிப்பிட்ட காலத்துள் வளருகின்றோம். ஏனைய உயிரினங்கள் போன்று எமது வாழ்வும் ஒரு முடிவுக்கு வருகின்றது. மரணம் பற்றிய எண்ணம், எமக்கு குறிப்பிட்ட அளவு வாழ்வே உண்டு என்பதை நினைவூட்டுகிறது.

1008. இறப்பு பாவத்தின் விளைவு. பாவத்தின் விளைவாக மனிதனில் இறப்பு வந்தது என்று திருச்சபை போதிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனின் இயல்பு அழியும் தன்மை கொண்டதென்றாலும் இறைவன் மனிதனை இறப்பதற்காகப் படைக்கவில்லை. எனவே இறப்பு இறைவனின் திட்டத்திற்கு மாறானதாக, பாவத்தின் விளைவாக ஏற்பட்டது.

1009. இறப்பு கிறிஸ்துவினால் மாற்றப்பட்டுள்ளது. இயேசு, இறைமகன், தாமே சாவுக்கு உட்பட்டார். சாவை எதிர்நோக்கும்போது தந்தையின் திருவுளத்துக்கு முழுமையாகவும் சுயாதீனமாகவும் தன்னை அர்ப்பணித்தார். இத்தகைய அர்ப்பணம் மரணத்தை சாபம் என்ற நிலையிலிருந்து ஆசீர்வாதமாக மாற்றியுள்ளது.

## கிறிஸ்தவ இறப்பின் அர்த்தம்

1010. கிறிஸ்துவினால் கிறிஸ்தவ இறப்புக்குப் புதிய அர்த்தம் உண்டாயிற்று. பிலிப் 1:21, 2 திமோ 2:11. கிறிஸ்தவ இறப்பின் புதிய அர்த்தம் இதுதான். திருமுழுக்கின் மூலம் அருட்சாதனமுறையில் புதிய வாழ்வு பெறுவதற்காக நாம் கிறிஸ்துவோடு இறந்துள்ளோம். நாம் அருளில் இறந்தோமானால் உடல் ரீதியான இறப்பு "கிறிஸ்துவோடு இறப்பதை" நிறைவு செய்து மீட்பின் நிகழ்விலே அவரோடு ஒன்றுபடுதலை முழுமையாக்குகிறது.

1011. இறப்பிலே கடவுள் மனிதனை அழைக்கிறார். எனவே, கிறிஸ்தவன் தூய பவுல் போன்று இறப்பின் மட்டில் ஒரு ஆவலை ஏற்படுத்தலாம்: பிலிப் 1:23. கிறிஸ்துவின் முன்மாதிரியைப் பின்பற்றி கிறிஸ்தவனும் தனது இறப்பை தந்தைமட்டிலுள்ள அன்பும் அமைச்சலுமாக மாற்றலாம்.

1013. இறப்பு மனிதனது இவ்வுலக பயணத்தின் முடிவு. இது இறைவனது அருளோடும் இரக்கத்தோடும் இறைவனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டத்தோடும் ஒத்துழைத்து தனது வாழ்வின் இறுதி முடிவைத் தீர்மானிக்கச் செய்கிறது. மறுபிறப்பென்பது இல்லை.

1014. எமது இறப்புக்கு எம்மைத் தயார் செய்யுமாறு திருச்சபை நம்மைத் தூண்டுகிறது. சடுதிமரணத்திலின்று எம்மைக் காத்தருளும் ஆண்டவரே என்று வேண்டுகிறது. எங்கள் மரணநேரத்திலும் வேண்டிக் கொள்ளும் என்று மரியன்னையிடம் வேண்டுகிறோம். நல்மரணத்துக்காக புனித சூசையப்பரிடம் வேண்டுகின்றோம்.

## நடுத்தீர்வை

1021. இறப்பு மனிதவாழ்வை முடிவுக்குக் கொண்டுவந்து கிறிஸ்துவிலே வெளிப்படுத்தப்படும் அருளை ஏற்கவோ நிராகரிக்கவோ செய்கிறது. கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது நாம் அவரை எதிர்கொள்ள வேண்டுமென திருச்சபை போதிக்கின்றது. அதேவேளை ஒவ்வொரு மனிதனும் தனது செயல்களுக்கும் விசுவாசத்திற்கும் ஏற்ப தனது இறப்பின் முடிவில் சன்மானம் வழங்கப் படுவான் என்று மீண்டும் மீண்டும் போதிக்கின்றது. பணக்காரன், ஏழை லாசரின் உவமை, நல்ல கள்வனுக்கு கிறிஸ்துவின் வார்த்தை என்பன இவற்றை உறுதி செய்கின்றன.

1022. ஒவ்வொரு மனிதனும் அவனது மரணத்தின்போது உத்தரிப்பு ஸ்தலத்தின் மூலமாக அல்லது நேரடியாக நித்திய தீர்ப்பைப் பெறுகின்றான். இது நித்திய சம்பாவனையாகவோ அல்லது உடனடியான நித்திய தண்டனையாகவோ அமைகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1023. இறைவனின் அருளிலும் நட்பிலும் இறப்போர் முழுமையாகத் தூய்மையாக்கப்பட்டு கிறிஸ்துவோடு வாழ்வர். அவர்கள் இறைவனைப்போல் இருந்து அவர் இருப்பதுபோல் முகம்முகமாய் அவரைத் தரிசிப்பர்.

1024. மூவொரு கடவுளோடும் அன்னை மரியாளோடும் புனிதர்களோடும், வானதூதரோடும் வாழும் இம் முழுமையான வாழ்வை மோட்சம் என்கிறோம். மோட்சம் என்பது மனித ஏக்கங்களின் இறுதி முடிவும், நிறைவும், உன்னதமான மகிழ்ச்சியுமாகும்.

1025. மோட்சத்தில் இருப்பது என்பது "கிறிஸ்துவோடு இருப்பது" ஆகும். தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் "கிறிஸ்துவிலே" வாழ்கின்றார்கள். ஆனால் தங்கள் சுய அடையாளம், பெயர் என்பவற்றைப் பேணுகின்றார்கள்.

1026. தனது இறப்பாலும் உயிர்ப்பாலும் கிறிஸ்து விண்ண கத்தை நமக்குத் திறந்துள்ளார். விண்ணகத்திலுள்ளோரின் வாழ்வு கிறிஸ்துவினால் அடைந்த மீட்பின் பலன்களை முழுமையாக அனுபவிப்பதாகும். தன்னில் விசுவாசம் கொண்டு தனது சித்தத்திற்குப் பிரமாணிக்கமாய் இருந்தவர்களை கிறிஸ்து தனது மகிமையில் பங்காளிகளாயிருக்கச் செய்கிறார். மோட்சம் என்பது கிறிஸ்துவோடு முழுமையாக இணைக்கப்பட்ட பேறு பெற்றோரின் கூட்டம்.

1027. புனிதர்கள் இறைவனோடு கொண்டுள்ள உன்னதமான இவ்வுறவு எம்மால் புரிந்து கொள்ள முடியாதது. விவிலியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வு, ஒளி, சமாதானம், திருமணவிருந்து போன்ற உருவகங்கள் மூலமாகவே இதை விளக்குகின்றது.

1028. இறைவனை அவர் இருப்பதுபோல் நாம் காணமுடியாது. அவர்தாமே வெளிப்படுத்த வேண்டும்.

## உத்தரிப்பு ஸ்தலம்

1030. இறைவனின் அருளிலும் நட்பிலும் இறப்பவர்கள், முழுமையாகத் தூய்மையாக்கப்படாத நிலையில் நிச்சயமாக நித்திய வாழ்வைப் பெற்றுக் கொள்ளுவார்கள். ஆனால் மோட்சத்தின் மகிழ்வை அடையத் தேவையான புனிதத்தை அடைந்து கொள்வதற்கு இறப்பின் பின் அவர்கள் தூய்மைப்படுத்தப்பட வேண்டும்.

1031. இந்த இறுதித் தூய்மையாக்கலை உத்தரிப்பு ஸ்தலம் என்று திருச்சபை அழைக்கின்றது. இது நரகத்திலிருந்து வித்தியாசமானது.

1032. இவர்களுக்காக மன்றாடும் பழக்கம் விவிலியத்தின் கூற்றை ஆதாரமாகக் கொண்டுள்ளது. 2 மக்கபே 12:46. ஆரம்பத்திலிருந்து திருச்சபை இறந்தோரை நினைவு கூர்ந்து அவர்களுக்காக செபங்களை ஒப்புக் கொடுத்து வருகின்றது. சிறப்பாக அவர்கள் இறைவனின் திருமுக தரிசனத்தைக் காண வேண்டுமென திருப்பலி வேளையில் மன்றாடுகிறது. இறந்தவர்களுக்காக தானம் வழங்குதல், பரிபூரண பலன்கள், பாவப் பரிகார முயற்சிகள் என்பவற்றை திருச்சபை ஊக்குவிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1033. நாமாக விரும்பி இறைவனை நேசிக்காவிடில் அவரோடு இணைந்திருக்க முடியாது. நாம் இறைவனுக்கெதிராக, அயலவருக்கெதிராக, நமக்கெதிராக கனமான பாவத்தைக் கட்டிக் கொண்டால் இறைவனை அன்பு செய்ய முடியாது. 1 யோவா 3:14-15. சின்னஞ் சிறியவர்களின் தேவைகளை நிறைவேற்றாவிடில் அவரை விட்டுப் பிரிக்கப் படுவோமென நமதாண்டவர் கூறுகிறார். மத். 25:31-46. கனமான பாவத்துக்கு மனம் வருந்தாமலும் இறைவனின் இரக்கத்தைத் தேடாமலும் இருப்பது இறைவனிடமிருந்து பிரிந்து வாழ நாமாகவே தீர்மானிப்பதாகும். இவ்வாறு திட்டவட்டமாக இறைவனிடமிருந்தும் புனிதர்களிடமிருந்தும் பிரிந்து வாழ்வதை ‘‘நரகம்’’ என்கின்றோம்.

1034. தமது வாழ்வின் இறுதிவரை மனந்திரும்பாதவர்களுக்கு இருக்கும் “அணையாத நெருப்பு” பற்றி கிறிஸ்து அடிக்கடி கூறுகின்றார். அங்கு அவர்களது உடலும் ஆன்மாவும் தண்டனையை அனுபவிக்கும். மத் 13:41-42. அவர்களுக்குத் தண்டனைத் தீர்ப்பைக் கூறுவார். மத் 25:41.

1035. நரகம் உண்டு என்றும் அது நித்தியத்துக்கும் உண்டென்றும் திருச்சபை போதிக்கின்றது. சாவான பாவத்தோடு இறப்பவர்கள் நரகத்துக்குச் சென்று “நித்திய நெருப்பாகிய” நரக தண்டனையை அனுபவிப்பார்கள். மனிதன் இறைவனின் அன்பை அனுபவிப்பதற்காகவே படைக்கப்பட்டான். இந்த இறைவனின் அன்பை நித்தியத்திற்கும் இழந்து வாழ்வதே நரகத்தின் முக்கியமான தண்டனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1036. நரகம்பற்றிய விவிலியத்தின் கூற்றுக்களும் திருச்சபையின் போதனைகளும் நிரந்தமான முடிவுபற்றி தனது சுதந்திரத்தைப் பொறுப்புடன் பயன்படுத்த மனிதனுக்கு விடுக்கும் அழைப்பு ஆகும். அதே வேளை அவை மனமாற்றத்திற்கான அழைப்புமாகும். மத் 7 : 13-14.

1037. இறைவன் எவரையும் நரகத்துக்கென படைக்கவில்லை. அதற்கு பிரியவேண்டும் என்ற இலக்கோடு இறைவனிட மிருந்து பிரியவேண்டும் (சாவான பாவம்). அத்துடன் அதில் இறுதிவரை நிலைத்திருக்க வேண்டும். எவரும் அழியக் கூடாது; மாறாக எல்லோரும் மனந்திரும்பி வாழ வேண்டுமென்று விரும்பும் இறைவனின் எண்ணத்தை திருப்பலி வேளையில் திருச்சபை நினைவூட்டி மன்றாடுகின்றது.

# பாகம் 3

## கிறிஸ்துவில் வாழ்வு

## 1வது பெரும் பிரிவு

## மனிதனுக்கான அழைப்பு - அருள் வாழ்வுக்கு

### அதிகாரம் 1

### மனித மாண்பு

### பேறு பெற்றோராயிருக்க நமக்கு விடுவிக்கப்படும் அழைப்பு

1716. மலைப்பொழிவு இயேசுவினது போதனையின் மையம். ஆபிரகாம் தொடக்கம் தேர்ந்தெடுக்கப்பட்டோரை அது கவனத்தில் கொள்கிறது. மத். 5:3-10.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1717. மலைப்பொழிவு இயேசுக் கிறிஸ்துவின் முகத்தைப் படம் பிடித்துக்காட்டி, அவரது அன்பை விளக்குகின்றது. அவை பாடுகள், உயிர்ப்பின் மகிமையோடு இணைக்கப் பட்ட இறைமக்களின் அழைப்பை விளக்குகின்றது. அவை கிறிஸ்தவ வாழ்வின் முக்கியமான செயல் களுக்கும் மனப்பான்மைகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கின்றன. அவை துன்பங்கள் மத்தியில் நம்பிக்கையை ஊட்டுகின்ற முரண்பாடுகள் போலத் தோற்றமளிக்கும் வாக்குறுதிகள். இவை மரியன்னையிலும், புனிதர்களிலும் ஏற்கனவே துலாம்பரமாக நிறைவேறத் தொடங்கிவிட்டன. ஆனால் சீடர்களுக்கு இவ்வாக்குறுதிகளும் ஆசீர்வாதங்களும் மங்கலாகவே புலப்படுத்தப்படுகின்றன.

## II. மகிழ்ச்சிக்கான ஆவல்

மகிழ்ச்சிக்கான இயல்பான ஆவலுக்கு மலைப் பொழிவுகள் பதிலளிக்கின்றன. இந்த ஆவல் தெய்வீக நிலையில் ஆரம்பிக்கின்றது. இதை இறைவன் மனித உள்ளத்தில் வைத்து இறைவனால் மட்டுமே நிறைவு செய்யப்படக் கூடியதாக ஆக்கியுள்ளார்.

1719. மலைப்பொழிவுகள் மனிதவாழ்வின் நோக்கத்தை வெளிப்படுத்துகின்றன. இறைவன் தனது பேறுபெற்ற நிலைக்கு நம்மை அழைக்கிறார். இந்த அழைப்பு ஒவ்வொரு தனிநபருக்கும், அதேவேளை முழுத் திருச்சபைக்கும் விடுக்கப்படுகிறது.

## III. கிறிஸ்தவ பேறு பெற்றநிலை.

1720. இறைவன் மனிதனை அழைக்கும் பேறுபெற்ற நிலையை விளக்குவதற்கு புதிய ஏற்பாடு பல சொற்றொடர்களை பயன்படுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இறையரசின் வருகை (மத் 4:17)
- தெய்வ தரிசனம் : "தூய உள்ளத்தோர் பேறு பெற்றோர். ஏனெனில் அவர்கள் இறைவனைக் காண்பர்" மத். 5:8
- ஆண்டவரின் மகிழ்வில் பிரவேசித்தல் மத். 25: 21, 23
- கடவுளின் இளைப்பாற்றிக்குள் நுழைதல் எபி 4:7-11

1721. கடவுள் நம்மை இவ்வுலகில் வைத்தது தம்மை அறிந்து, அன்புசெய்து, பணிபுரியவும் அதனால் மோட்சத்தை அடையவும் ஆகும். மலைப்பொழிவு நம்மை இறை இயல்பிலும் நித்திய வாழ்விலும் பங்கு கொள்ளச் செய்கின்றது. பேறுபெற்ற இந்நிலையில் மனிதன் கிறிஸ்துவின் மகிமைக்குள்ளும் திரித்துவ வாழ்வின் மகிழ்ச்சிக்குள்ளும் நுழைகின்றான்.

1722. இத்தகைய பேறுபெற்ற நிலைகள் மனித விளக்கங்களின் வல்லமையைக் கடந்ததாக இருக்கின்றன. இது இறைவனின் முழுமையான கொடை.

1723. எமக்கு வாக்களிக்கப்பட்ட பேறுபெற்ற நிலைகள் எமது அறநெறி வாழ்வு பற்றிய விருப்பங்களைத் தெரிந்தெடுக்க நமக்கு அழைப்பு விடுக்கின்றன. தவறான உணர்வுகளிலிருந்து நமது உள்ளங்களைத் தூய்மைப் படுத்தி அனைத்திற்கும் மேலாக இறைவனின் அன்பைத் தேட நம்மை அழைக்கின்றன. உண்மையான மகிழ்ச்சி பணத்திலோ, நலமான வாழ்விலோ, நற்பெயர் அல்லது வல்லமையிலோ அல்லது விஞ்ஞானம், தொழில்நுட்பம், கலை போன்ற எந்த மனித சாதனையிலோ இல்லை. அது அனைத்து நன்மைத்தனத்துக்கும் அன்புக்கும் ஊற்றான இறைவனிலேயே இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1724. பத்துக் கற்பனைகள், மலைப்பொழிவு, அப்போஸ்தலர்களின் படிப்பினைகள் போன்றவை எமக்கு இறையரசுக்கான பாதைகளை விளக்குகின்றன. தூய ஆவியின் அருளினால் நாம் பாதுகாக்கப்பட்டு நாளாந்த செயற்பாடுகளால் அடிமேல் அடியெடுத்து வைக்கின்றோம். கிறிஸ்துவின் வார்த்தையால் ஆற்றல் பெற்று இறைவனின் மகிமைக்காக படிப்படியாக திருச்சபையில் நாம் பலன் கொடுக்கின்றோம்.

## பகுதி 4

## மனித செயல்களின் ஒழுக்கப் பண்புகள்

1749. சுதந்திரம்தான் ஒருவரை அவரது செயலுக்குப் பொறுப்புள்ளவராக்குகிறது. மனிதன் திட்டமிட்டு ஒரு செயலைச் செய்யும்போது அச் செயலுக்கு உரியவனாகின்றான். மனித செயல்கள், அதாவது மனச்சாட்சியினால் தீர்மானிக்கப்பட்டு சுதந்திரமாகத் தேர்ந்தெடுக்கபட்ட செயல்கள் ஒழுக்க நிலையில் சீர்தூக்கிப் பார்க்கப் படலாம். அவை ஒன்றில் நல்லவை அல்லது தீயவை.

### I. ஒழுக்கப்பண்புகளின் ஊற்றுக்கள்

1750. மனித செயல்களின் ஒழுக்கப்பண்புகள் தேர்ந்தெடுக்கப்பட்ட விடயம், நோக்கம், செயலின் சூழல், ஆகியவற்றுள் அடங்கும்.

விடயம், நோக்கம், சூழல் என்பன சேர்ந்துதான் ஒழுக்கப்பண்புகளின் ஊற்றுக்கள் அல்லது நிர்ணயிக்கும் அம்சங்கள் எனப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1751. தேர்ந்தெடுக்கப்பட்ட விடயம் நல்லதென்றே மனித சித்தம் நாடுகிறது. இது மனித செயலுக்கான ஒன்று.

1752. தேர்ந்தெடுக்கப்பட்ட விடயமும் அதன் நோக்கமும் செயல்படும் ஆளிலேயே தங்கி உள்ளன. ஒரு செயலைக் கணிப்பதற்கு அச்செயலுக்கான நோக்கம் முக்கியம்.

1754. ஒழுக்கப்பண்புகளின்படி நல்ல செயலானது, நல்ல விடயம், நல்ல நோக்கம் நல்ல சூழலைக் கொண்டிருக்கும். பொருள் (விடயம்) நல்லதாயினும் நோக்கம் பிழையான தாயிருந்தால் செயலைக் கெடுத்துவிடும். (உ+ம்) மக்கள் பார்க்க வேண்டும் என்பதற்காக செபித்தல், நோன்பிருத்தல்.

1755. சில செயல்கள் தம்மிலேயே தவறானவை (உதாரணம்) களவு, விபச்சாரம் போன்றவை. எக்காரணங்களைக் கொண்டும் அவை நன்மையாக முடியா.

எனவே, மனித செயலின் ஒழுக்கப்பண்புகளை ஒருவரின் நோக்கம் அல்லது சூழலை மட்டும் வைத்துக் கொண்டு தீர்மானிப்பது தவறாகும். நோக்கம் அல்லது சூழல் இன்றியே தம்மிலேயே சில செயல்கள் தவறானவை யாகும். (உதாரணம்) தெய்வநிந்தனை, களவு, விபச்சாரம் என்பன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகாரம் 3

# இறைவனின் மீட்பு: சட்டமும் அருளும்

## பகுதி 1 - அறநெறிச் சட்டம்

1950. அறநெறிச்சட்டம் இறை ஞானத்தின் செயல். தந்தையின் அறிவுரை என விவிலியப் பொருள்படும். இது வாக்களிக்கப்பட்ட பேறுபெற்ற நிலையை அடைவதற்குச் செல்லும் வழிகளை மனிதனுக்குக் காட்டுகிறன்றது.

1951. சட்டம் என்பது தகுந்த அதிகாரியால் பொது நன்மைக்காக ஏற்படுத்தப்பட்ட நடத்தையின் ஒழுங்கு.

1952. அறநெறிச்சட்டத்தில் பல வெளிப்பாடுகள் உள்ளன. அவை ஒன்றோடொன்று தொடர்புள்ளவை. நித்திய சட்டம், இறைவனிலிருந்து ஊற்றெடுப்பது, இயற்கை சட்டம், வெளிப்படுத்தப்பட்ட சட்டம் (நற்செய்தியின் சட்டம்) திருச்சபையின் சட்டம்.

1953. கிறிஸ்துவிலேதான் அறநெறிச்சட்டம் நிறைவையும் ஒற்றுமையையும் காண்கிறது. இயேசுக்கிறிஸ்து தன்னிலே நிறைவின் வழியாக இருக்கிறார். உரோ 10:4

## I. இயற்கை அறநெறிச் சட்டம்

1954. இயற்கை அறநெறிச்சட்டம் மனிதன் தன் புத்தியினால் நன்மை தீமை, உண்மை பொய் என்பவற்றைப் பிரித்துணரக்கூடிய ஆரம்ப உணர்வைக் கொடுக்கின்றது.

1955. இயற்கைச் சட்டம் அறநெறி வாழ்வுக்குத் தேவையான முதலும் அத்தியாவசியமுமான ஒழுங்குகளைக் கூறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1956. ஒவ்வொரு மனிதனுடைய உள்ளத்திலும் இருக்கும் இயற்கைச் சட்டமானது தனது ஒழுங்கிலே உலகளாவிய நிலையைக் கொண்டுள்ளது; அதன் அதிகாரம் எல்லா மனிதருக்கும் செல்லுகின்றது. அது மனிதனின் மாண்பையும் அடிப்படை உரிமைகள் கடமைகளுக்குரிய அடிப்படையையும் வெளிப்படுத்துகிறது.

1959. இயற்கைச் சட்டமானது மனிதன் தனது அறநெறிச் சட்டத்தின் அமைப்பைக் கட்டியெழுப்புவதற்குச் சிறந்த அடித்தளமாக அமைகின்றது. மனித சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு இன்றியமையாத அறநெறிக்கான அடித்தளத்தைக் கொடுக்கின்றது.

1960. இயற்கைச் சட்டத்தின் ஒழுங்குகள் எல்லோராலும் தெளிவாகவும் உடனடியாகவும் தெரிந்து கொள்ளப் படுவதில்லை.

## II. பழைய சட்டம்

1961. எம்மைப் படைத்தவரும் மீட்டவருமான இறைவன், இஸ்ராயேலைத் தமது மக்களாக இருப்பதற்கெனத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்குத் தம் கட்டளைகளை வெளிப்படுத்தி, இயேசுக்கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தம் செய்தார். மோயீசனின் சட்டம் எமது சாதாரண அறிவால் விளங்கிக் கொள்ளக் கூடிய பல உண்மைகளைக் கொண்டுள்ளது. மீட்பின் உடன்படிக்கையை அவை விளக்குகின்றன.

1962. பழைய சட்டம்தான் வெளிப்படுத்தபட்ட சட்டத்தின் முதல் கட்டம். அதன் அறநெறி ஒழுங்குகள் பத்துக் கற்பனைக்குள் அடக்கப்பட்டுள்ளன. பத்துக் கற்பனையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்குகள் இறைவனின் சாயலாகப் படைக்கப்பட்ட மனிதனின் அழைப்புக்கு அடித்தள மிடுகின்றன. இறையன்புக்கும் பிறர் அன்புக்கும் முரணானவற்றைத் தடை செய்கின்றன. அறநெறிக்கு அத்தியாவசிய மானவற்றைக் கூறுகின்றன. இறைவனுடைய அழைப்பையும் வழிகளையும் மனிதனுக்குத் தெரிவித்து, தீமையிலிருந்து அவனைப் பாதுகாக்க ஒவ்வொரு மனிதனுடைய மனச்சாட்சிக்கும் கொடுக்கப்பட்ட ஒளியே பத்துக் கற்பனை.

1964. பழைய சட்டம் நற்செய்திக்கு ஓர் ஆயத்தம். அது கிறிஸ்துவிலே நிறைவேறப்போகின்ற பாவப் பரிகாரம் அல்லது பாவவிமோசனப் பணியை முன்னறிவிக்கின்றது. அது புதிய ஏற்பாட்டுக்கு ஆவிக்கு ஏற்றவாறு வாழ உருவகங்கள், மாதிரிகள், அடையாளங்களைக் கொடுக்கின்றது. இறுதியாக சட்ட ஞானநூல்களின் படிப்பினைகளாலும் இறைவாக்கினர்களாலும் நிறைவு பெறுகின்றது. இவை புதிய உடன்படிக்கைக்கும் இறையரசுக்கும் வழிசமைக்கின்றன.

## III. புதிய சட்டம் அல்லது நற்செய்திச் சட்டம்

1965. இறைச்சட்டம், இயற்கைச்சட்டம், வெளிப்படுத்தப்பட்ட சட்டம் அனைத்திற்கும் இவ்வுலகில் நிறைவு தருவது புதிய அல்லது நற்செய்திச் சட்டமே. இது கிறிஸ்துவின் செயல்; இது சிறப்பாக மலைப் பொழிவின் மூலமாக வெளிப்படுத்தப்பட்டது. இது ஆவியானவரின் செயலும் கூட. இவ்வாறு இது உள்ளார்ந்த அன்பின் சட்டமாக ஆகின்றது. எபி. 8:8,10.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1966. புதிய சட்டமானது விசுவாசிகளுக்கு கிறிஸ்துவிலுள்ள விசுவாசத்தின் மூலமாகக் கொடுக்கப்பட்ட தூய ஆவியின் அருள். இது அன்பினால் செயல்படுகிறது. நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை மலைப்பொழிவின் மூலம் தெளிவுபடுத்துகிறது. அருட் சாதனங்கள் மூலம் அதை நிறைவேற்றுவதற்கு வேண்டிய அருளைக் கொடுக்கிறது.

1967. நற்செய்திச் சட்டம் பழைய சட்டத்தை நிறைவுக்குக் கொண்டு வருகின்றது. இது இறையரசை நோக்கி வழிநடத்துகிறது. புதிய நம்பிக்கையை விசுவாசத்தோடு ஏற்றுக்கொள்ள ஏழைகள், தாழ்ச்சியுள்ளோர், துன்புறுத்த ப்பட்டோர், தூய உள்ளத்தோர் போன்ற திறந்த மனமுள்ளோருக்குக் கொடுக்கப்படுகிறது.

1968. நற்செய்திச் சட்டம் பத்துக் கற்பனைகளை நிறைவு செய்கின்றது.
மலைப்பொழிவு பழைய சட்டத்தில் எதையும் அழிப்ப தில்லை; மாறாக அவற்றின் முழுமையான இறை, மனித உண்மைகளை வெளிப்படுத்துகிறது.

1969. புதிய சட்டம் சமயத்தின் செயல்களை நடைமுறைப் படுத்துகிறது. தானம், செபம், நோன்பு இவற்றை மனிதர் பார்க்கும்படி செய்யாமல் விண்ணக தந்தைக்குத் தெரியும்படி செய்யக் கோருகின்றது. அதன் செபம் "பரலோக மந்திரம்"

1970. நற்செய்திச் சட்டம் இயேசுவின் பின்வரும் வார்த்தைகளைக் கடைப்பிடிக்கச் செய்கிறது மத் 7:12

1971. கிறிஸ்துவின் பின்வரும் வார்த்தைகளைக் கடைப்பிடிக்கச் செய்கிறது. உரோ 12:9-13.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1972. இப்புதிய சட்டம் அன்பின் சட்டமாக அழைக்கப்படுகிறது. ஏனெனில் இது பயத்தினாலல்ல, எம்முள் பொழியப்பட்ட தூய ஆவியின் தூண்டுதலால் செயல்படுத்தப்படுகிறது. விடுதலையின் சட்டமாகிய இது எம்மை பழைய சட்டம் சடங்குகளின் அனுசரிப்பிலிருந்து விடுவித்து அன்பின் தூண்டுதலினால் செயல்படச் செய்கின்றது.

## 2வது பெரும் பிரிவு

## பத்துக் கற்பனைகள்

### அதிகாரம் 1

உன் கடவுளாகிய ஆண்டவரை உன்முழு உள்ளத்தோடும், முழு ஆன்மாவோடும், முழு வலிமையோடும் அன்பு செய்வாயாக.

### பகுதி 1
### முதலாவது கற்பனை

**I. "உன் கடவுளாகிய ஆண்டவரை ஆராதித்து அவருக்கு மட்டுமே பணி புரிவாயாக"**

2084. இறைவன் வரலாற்றில் நடைபெற்ற மாபெரும் விடுதலை நிகழ்ச்சியை நினைவுபடுத்துகின்றார். இணைச்சட்டநூல் 6:13-14. இதன் முதல் வார்த்தை முதலாவது கற்பனையை நினைவூட்டுகின்றது. இறைவன் தன்னை ஆராதித்து தமக்குச் சேவை செய்வதற்கு அழைக்கின்றார்.

2085. ஒரே உண்மையுள்ள கடவுள் தனது மாட்சிமையை இஸ்ராயேலுக்கு வெளிப்படுத்துகிறார். மனிதனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையும் அழைப்பும்பற்றிய வெளிப்பாடு இறைவனுடைய வெளிப்பாட்டுடன் தொடர்புள்ளது. மனிதனுடைய அழைப்பு படைப்புக்களுடன் ஒன்றுபட்டு செயற்பட்டு இறைவனை வெளிப்படுத்துவதாகும். "அவன் இறைவனின் சாயல்"

**விசுவாசம்**

2087. முதலாவது கற்பனை விசுவாசம், நம்பிக்கை, இறையன்பை உள்ளடக்குகின்றது. இறைவன்மட்டில் எமது கடமை அவரில் விசுவாசம் கொண்டு அவருக்குச் சான்று பகருவதாகும்.

2088. முலாவது கற்பனை நாம் எமது விசுவாசத்தை நிதானத் தோடும் விழிப்போடும் பாதுகாத்து வளர்க்க வேண்டு மென்றும், இவற்றிற்கு எதிரானவற்றை விலக்கவேண்டும் என்றும் எதிர்பார்க்கின்றது.

**நம்பிக்கை**

2090. இறைவன் தன்னை வெளிப்படுத்தி மனிதனை அழைக்கும்போது மனிதன் தன் சொந்தப் பெலத்தினால் பதிலளிக்க முடியாது. பதில் அன்பைக் காட்டவதற்கு இறைவன் வல்லமை தருவார் என்று நம்பவேண்டும். நம்பிக்கை என்பது இறைவனின் ஆசீரையும் அவரது திருமுக தரிசனத்தையும் திடமாக எதிர்பார்த்திருப்பதும் இறை அன்பை மனம் நோகச் செய்தால் அவரது தண்டனையைப் பெறுவோம் என்ற பயமும் ஆகும்.

**அன்பு**

2093 இறைவனது அன்பிலுள்ள விசுவாசம் இறையன்புக்கு நேர்மையான உள்ளத்துடன் பதிலளிக்க வேண்டுமென்ற கட்டாயத்தை உள்ளடக்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது கற்பனை அனைத்திற்கும் மேலாக இறைவனை அன்பு செய்ய வேண்டும் என்றும் படைப்புக்களை அவருக்காக அன்பு செய்ய வேண்டும் என்றும் கற்பிக்கின்றது.

## II. அவருக்கு மட்டுமே பணிபுரிவாயாக

### ஆராதனை

2096. ஆராதனை என்பது சமயத்தின் முதல் புண்ணியம். இறைவனை ஆராதிப்பதும் அவரை எம் இறைவனாக ஏற்றுக் கொள்வதும், எம்மைப் படைத்தவராக, மீட்பராக, படைப்புக்கள் அனைத்திற்கும் ஆண்டவராக, அளவு கடந்த அன்புள்ளவராக ஏற்றுக்கொள்வதுமாகும். லூக் 4:8 காண் இணைச்சட்டம் 6:13.

### செபம்

2098. முதலாவது கற்பனை உள்ளடக்குகின்ற விசுவாசம், நம்பிக்கை, இறை அன்பு என்பன செபத்தில் நிறைவு பெறுகின்றன. எமது உள்ளத்தை இறைவனிடம் எழுப்புகின்றன. இது ஆராதனையின் ஒரு அடையாளமுமாகும். செபம் புகழ்ச்சி, நன்றி, வேண்டுதல் எனப்படும். இறைவனின் கற்பனைகளை அனுசரிப்பதற்கு செபம் இன்றியமையாத ஓர் நிபந்தனை. லூக் 18:1.

### பலி

2099. ஆராதனையினதும் நன்றியினதும் அடையாளமாக இறைவனுக்குப் பலி ஒப்புக்கொடுப்பது தகுதியாகும்.

2100. வெளிப்படையான பலி உண்மையானதாயிருப்பதற்கு அது ஆன்மீக பலியின் வெளிப்பாடாக இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாக்குறுதிகளும் வாக்குத்தத்தங்களும்

2101. திருமுழுக்கு, உறுதிப்பூசுதல், திருமணம், குருத்துவம் போன்ற பல சந்தர்ப்பங்களில் கிறிஸ்தவன் இறைவனுக்கு வாக்குறுதிகள் கொடுக்க அழைக்கப்படுகிறான்.

## III. என்னைத்தவிர வேறு கடவுள் உனக்கு இல்லாமல் போவதாக.

2110. தன் மக்களுக்குத் தன்னை வெளிப்படுத்திய கடவுளைத் தவிர வேறு தெய்வங்களை மகிமைப்படுத்துவதை முதலாவது கற்பனை தடுக்கின்றது.

## மூடநம்பிக்கை

2111. மூடநம்பிக்கை என்பது சமய உணர்விலிருந்து திரிபுபட்ட நிலையும் அந்நிலை கொண்டுவரும் பழக்க வழக்கங்களுமாகும். இது சிலவேளை உண்மையான கடவுளுக்குச் செலுத்தும் ஆராதனையையும் பாதிக்கக்கூடும்.

## விக்கிரக ஆராதனை

பல தெய்வ வழிபாட்டை முதலாவது கற்பனை தடை செய்கின்றது.

உண்மையான ஒரே கடவுளைத்தவிர வேறந்தத் தெய்வங்களையும் வணங்குவதையோ விசுவாசிப்பதையோ தடைசெய்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பகுதி 2**
**இரண்டாங் கற்பனை**

## கடவுளுடைய திருப்பெயரை வீணாகச் சொல்லாதிருப்பாயாக.

"ஆண்டவரே! எங்கள் தலைவரே, உமது பெயர் உலகெங்கும் எவ்வளவு மேன்மையாய் விளங்குகிறது!" (தி.பா 8:1)

இரண்டாங் கற்பனை கடவுளின் பெயரை மதிக்கும்படி கற்பிக்கிறது. கடவுளின் பெயர் தூய்மையானது.

இரண்டாங் கற்பனை கடவுளுடைய பெயரை முறையற்ற வகையில் பயன்படுத்துவதை தடுக்கிறது.

கடவுளின் பெயரை, இயேசு கிறிஸ்துநாதரின் பெயரை, கன்னிமரியாளின் அல்லது புனிதர்களின் பெயரை நிந்தனைக் குரிய முறையில் பயன்படுத்துதல் தெய்வ நிந்தனை (Blasphemy) ஆகும்.

பொய் ஆணை (False oath) ஒரு பொய்க்குச் சாட்சியாகக் கடவுளை அழைக்கிறது. பொய் ஆணை எப்போதும் தமது வாக்குறுதிகளை நிறைவேற்றும் கடவுளுக்கு நாம் செலுத்த வேண்டிய வணக்கத்துக்கு முற்றும் முரணானது.

"உண்மைப்படியும் வணக்கத்துடனும் தேவையின்படியுமன்றி படைத்தவருடைய பெயராலோ, படைப்புக்களின் பெயராலோ ஆணையிடவேண்டாம்" (புனித லொயோலா இன்னாசியார்: ஞான ஒடுக்கச் சிந்தனைகள் 38)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுழுக்கில் கிறிஸ்தவன் திருச்சபையில் ஒரு பெயரைப் பெறுகிறான். பெற்றோர், ஞானப்பெற்றோர், பங்குக்குரு ஆகியோர் திருமுழுக்குப் பெறுபவருக்கு ஒரு கிறிஸ்தவப் பெயர் கொடுக்கப்படுவதற்குக் கவனம் செலுத்த வேண்டும்.

ஒரு கிறிஸ்தவன் தனது செபங்களையும் கருமங்க ளையும் "தந்தை, மகன், தூய ஆவியின் பெயராலே, ஆமென்" என்று சொல்லி சிலுவை அடையாளம் வரைந்து தொடங்க வேண்டும்.

கடவுள் ஒவ்வொருவரையும் அவரவருடைய சொந்தப் பெயராலே அழைக்கிறார். (ஏசா 43:1)

## பகுதி 3
## மூன்றாங் கற்பனை

### "கடவுளுடைய திருநாள்களை பரிசுத்தமாய் அனுசரிக்க மறவாதிருப்பாயாக"

"உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்குக் கட்டளையிட்ட படி ஓய்வு நாளைப் புனிதமாக கடைப்பிடி" (இ.ச 5:12)

"ஏழாம் நாளோ ஓய்வு நாளாகிய ''சாபாது" ஆண்டவருக்கு புனிதமான நாள்" (வி.ப 31:15)

முதற் படைப்பின் நிறைவாகிய ஓய்வு நாளின் (சாபாத்தின்) இடத்தை, கிறிஸ்துவின் உயிர்ப்பினால் தொடங்கப்பட்டுள்ள புதிய படைப்பை நினைவுபடுத்தும் ஆண்டவருடைய நாளாகிய ஞாயிறு வகிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்துவின் உயிர்ப்பு விழாவை வாரத்தின் எட்டாவது நாளில் திருச்சபை கொண்டாடுகிறது. அது ஆண்டவரின் நாள் என்று உரிமையோடு அழைக்கப்படுகிறது. (திருவழிபாடு 106).

"ஆண்டவரின் நாளாகிய ஞாயிறு முழுத்திருச்சபையிலும் பிரதான கடன்திருநாளாக அனுசரிக்கப்படவேண்டும்" (தி.ச. 1246) "ஆண்டவரின் நாளிலும் மற்றைய கடன்திருநாட்களிலும் விசுவாசிகள் கடவுளுக்கு அளிக்க வேண்டிய வழிபாட்டிற்கு அல்லது ஆண்டவருடைய நாளின் மகிழ்ச்சிக்கு அல்லது உடலின், ஆன்மாவின் ஓய்வுக்குத் தடையாயிருக்கக் கூடிய உடல் உழைப்பையும் வேறு வேலைகளையும் தவிர்க்க வேண்டும்" (தி.ச 1247)

ஆண்டவருடைய நாள் ஏற்படுத்தப்பட்டதன் மூலம் இளைப் பாற்றிக்கும் குடும்ப, பண்பாட்டு, சமூக, பக்தி முயற்சிகளில் சுதந்திரமாக ஈடுபடுவதற்கும் போதிய நேரம் அனைவருக்கும் அளிக்கப்படுகிறது.

ஆண்டவருடைய நாளை அனுசரிக்கத் தடையாயிருக்கும் எதையும் அவசியமின்றி மற்றவர் மேல் சுமத்துவதை ஒரு கிறிஸ்தவன் தவிர்க்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகாரம் - 2

## "உன்னை அன்பு செய்வது போல உன் அயலானையும் அன்பு செய்வாயாக"

### பகுதி 4

### நாலாங் கற்பனை

### "உன் தந்தையையும் தாயையும் சங்கித்திருப்பாயாக"

"உன் தந்தையையும் தாயையும் மதித்து நட" (இ.ச. 5:16. மத் 7:10)

நாலாங் கற்பனையின் மூலம் கடவுள் தமக்குப்பின், நம் பெற்றோரையும் நமது நலனுக்காக அதிகாரம் அளிக்கப் பட்டவர்களையும் நாம் மதிக்க வேண்டுமென்று கற்பித்துள்ளார்.

திருமணச் சமூகம் தம்பதிகளின் சம்மதத்தாலும் ஒற்றுமையாலும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மெய்விவாகமும் குடும்பமும் இணைக்கப்படுவோரின் நலனையும் பிள்ளைகளைப் பெற்றெடுத்துப் பயிற்றுவதையும் இலக்காகக் கொண்டுள்ளது.

"தனி மனிதனுடையவும், மனித சமுதாயத்தினுடையவும் கிறிஸ்தவ சமூதாயத்தினுடையவும் நல்வாழ்வு, திருமண, குடும்ப சமூகத்தின் நன்னிலைமையோடு நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது" (இ.உ.தி 47)

பிள்ளைகள் பெற்றோருக்கு மரியாதையும் நன்றியறிதலும், நீதியான அமைச்சலும், உதவியும் உடையவர்களாய் இருக்கக் கடமைப்பட்டுள்ளனர். பிள்ளைக்குரிய மரியாதை குடும்ப வாழ்வு முழுவதிலும் ஒற்றுமையை வளர்க்க உதவுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கள் பிள்ளைகளுடைய விசுவாசத்தின், செபத்தின், எல்லாப் புண்ணியங்களின் பயிற்சிக்கு பெற்றோரே முதல் பொறுப்புள்ளவர்கள். பிள்ளைகளின் உடல்சார், ஆன்மீகம் சார் தேவைகளுக்கு அவர்கள் தங்களாலியன்ற அளவு ஒழுங்குகள் செய்யக் கடமைப்பட்டுள்ளனர்.

பெற்றோர் தங்கள் பிள்ளைகளின் அழைத்தலை மதித்து ஊக்குவிக்கவேண்டும். கிறிஸ்தவனின் முதல் அழைப்பு கிறிஸ்துவைப் பின்பற்றுதலே என்பதை நினைவில் கொண்டு, அதை அவர்களுக்குக் கற்பிக்க வேண்டும்.

நாட்டின் தலைவர்கள் மக்களின் அடிப்படை உரிமைகளையும் அவற்றைச் சுதந்திரமாய் அனுபவிப்பதற்குரிய சூழலையும் மதித்துச் செயலாற்றக் கடமைப்பட்டுள்ளனர்.

நாட்டின் சமூகத்தை உண்மையிலும், நீதியிலும், ஒற்றுமையிலும், சுதந்திரத்திலும் கட்டி எழுப்பத் நாட்டுத் தலைவர்களுடன் சேர்ந்து உழைத்தல் நாட்டு மக்களின் கடமையாகும்.

நாட்டு மக்களின் நாட்டுத் தலைவர்களால் விதிக்கப்படும் நல்லொழுக்க விதிகளுக்கு முரணான சட்டங்களை மனச்சாட்சியின்படி பின்பற்ற முடியாது. ''மனிதர்களுக்குக் கீழ்ப்படிவதை விட கடவுளுக்கல்லவா கீழ்ப்படிய வேண்டும்'' (தி.ப. 5:29)

நாட்டின் அனைத்து சமூகங்களும் மனிதனின் தன்மையையும் அவனது இலக்கையும் மனதில் கொண்டு, தங்கள் தீர்மானங்களையும், தங்கள் நடத்தையையும் செயற்படுத்துகின்றன. கடவுளைப்பற்றியும், மனிதனைப் பற்றியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்செய்தி தரும் வாழ்வுக்கு வழியும் ஒளியுமான முறைமை களைப் புறந்தள்ளிச் செயற்படும் நாடுகளின் சமூகங்கள் இலகுவில் சர்வதிகார சமூகங்களாக மாறிவிடும்.

## பகுதி 5
## ஐந்தாங் கற்பனை

### "கொலை செய்யாதிருப்பாயாக"

"அவர் கையில்தான் அனைத்துப் படைப்புகளின் உயிரும் மனித இனத்தின் மூச்சும் உள்ளன." (யோபு 12:10)

எல்லா மனித உயிர்களும் கருவிலிருந்து மரணம்வரை தூய்மையானவை. ஏனெனில் மனிதன் தனக்காகவே உயிருள்ள தூய்மையான கடவுளின் சாயலாகவும் மாதிரியாகவும் அவரால் படைக்கப்பட்டுள்ளான்.

மனிதக் கொலை மனிதனின் மகிமைக்கும், படைத்த வரின் தூய்மைக்கும் முற்றிலும் முரணானது.

கொலை செய்வதற்கான தடை அநீதியாகத் தாக்கு பவரைத் தீங்கிழைக்கக் கூடிய நிலையிலிருந்து விடுவிக்கும் உரிமையைக் கொண்டிருப்பதில்லை. எனவே முறையான பாதுகாப்பு அளித்தல் பிறருடைய உயிருக்கு அல்லது பொது நலனுக்குப் பொறுப்பாயுள்ளவருடைய கடமையாகும்.

ஒரு குழந்தைக்கு அதன் கருவிலிருந்தே வாழும் உரிமையுண்டு. நேரடிக் கருசிதைவு (Direct Abortion) அதாவது, அது இலக்காகவோ, வழிவகையாகவோ விரும்பப்படுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக்கவிதிக்கு முற்றும் முரணான ஒரு "இழிசெயல்" (இ.உ.தி 27) ஆகும். மனித உயிருக்கு எதிரான இப்பாவத்திற்குத் தண்டனையாக அதைச் செய்பவரை திருச்சபையிலிருந்து நீக்கும் தண்டனையை, திருச்சபை விதித்துள்ளது.

ஒரு சிசு கருவிலிருக்கும்போதே ஒரு ஆளாக மதிக்கப் பட வேண்டுமாகையால், அது முழுமையாகப் பாதுகாகக்கப்பட்டு மற்ற எல்லா மனிதரைப்போல் பேணப்பட்டு, குணமாக்கப்பட வேண்டும்.

விரும்பிச் செய்யப்படும் இரக்கக்கொலை (Voluntary Euthenasia), அதன் தன்மையும் காரணங்களும் எப்படி இருந்தாலும், அது உண்மையான கொலையே. அது மனிதனின் மகிமைக்கும், அதைப் படைத்த உயிருள்ள கடவுளுக்குரிய மரியாதைக்கும் எதிரானது.

தற்கொலை நீதிக்கும், நம்பிக்கைக்கும், அன்புக்கும் மிகவும் எதிரான பாவம். அது ஐந்தாங் கற்பனையால் விலக்கப் பட்டடுள்ளது.

பிறரைப் பாவத்தில் விழுத்தும்படி ஒரு செயலைச் சுயாதீனமாகச் செய்தலும் அல்லது பிறரை பாவத்தில் விழாது காக்கக்கூடிய செயலை செய்யாமல் விடுதலும் இடறலாகும் (Scandal) அது ஒரு கனமான பாவம்.

போர் பல தீமைகளையும், அநீதிகளையும் விளை விப்பதால் அதைத் தடுப்பதற்கு நம்மால் இயன்றவைகளை எல்லாம் செய்ய வேண்டும். "பஞ்சம், படை, கொள்ளை நோய்களிலிருந்து எங்களைக் காத்தருளும். ஆண்டவரே" என்று திருச்சபை மன்றாடுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சபையும், மனித அறிவும் ஒழுக்கச் சட்டம் போரில் கூட நிலையான தன்மையுள்ளதென்று கூறுகின்றன. இதனைத் தெளிவாகத் தெரிந்து கொண்டும் மனித உரிமைக்கும் அதன் பொதுவான கொள்கைகளுக்கும் எதிராக இயங்குதல் பாரிய குற்றமாகும்.

“படைப்பலப் போட்டி மனிதகுலத்துக்கு உற்ற ஒரு கொள்ளை நோய், அது எளியோரைத் தாங்கமுடியாத அளவிற்குத் துன்புறுத்துகிறது” (இ.உ.திருச்சபை 81)

“அமைதியை ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர், ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் எனப்படுவர்” (மத். 5:9)

## பகுதி 6
## ஆறாங் கற்பனை

### “மோகபாவம் செய்யாதிருப்பாயாக”

“எல்லா மனிதரின் அடிப்படையான இயற்கையான அழைத்தல் அன்பு செய்வதே” (Familiaris Consortio 11)

கடவுள் மனிதரை ஆணாகவும் பெண்ணாகவும் படைத்ததன் மூலம் மனித ஆளுமையின் மாண்மை இருவருக்கும் சமனான முறையில் அளித்துள்ளார். ஆகவே, ஆணும், பெண்ணும் தங்கள் பால் வேற்றுமையை அறிந்து ஏற்றுக் கொள்ள வேண்டும்.

கிறிஸ்துவே கற்பின் சிறந்த மாதிரி. திருமுழுக்குப் பெற்றவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் வாழ்க்கையின் நிலைக்கு ஏற்ப கற்பை அனுசரிக்க அழைக்கப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பு ஆளில் பால்தன்மை இணைக்கப்படுவதைக் குறிக்கிறது. ஒரு ஆள் சொந்த ஆதிக்கத்தைக் கற்றுக் கொள்வதில் அது தங்கியுள்ளது.

கற்புக்கு எதிராக கனத்த பாவங்களுள் பின்வருவனவும் அடங்கும் : மணமாகாத ஒரு ஆணும், ஒரு பெண்ணும் விரும்பிச் செய்யும் உடலுறவு (Fornication), ஆசாபாசங்களைத் தூண்டும் சித்திரங்கள் (Pornography) ஓரினச் சேர்க்கை (Homosexuality) என்பன.

தம்பதிகள் சுயாதீனமாகச் செய்து கொள்ளும் உடன்பாடு பிரமாணிக்கமுள்ள அன்பை அடக்கியுள்ளது. அது அவர்களின் திருமணத்தில் பிரிவு ஏற்படாமல் பாதுகாக்கும் கடமையை அவர்களுக்கு அளிக்கிறது.

மகப்பேறு திருமண்தின் ஒரு நலன், ஒரு கொடை, ஒரு இலக்கு. தம்பதிகள் உயிர் அளிப்பதால் கடவுளின் தந்தைத் தன்மையில் பங்கு கொள்கின்றனர்.

பிள்ளைகளின் பிறப்பை முறைப்படுத்துதல் தந்தைக்கும் தாய்க்குமுரிய பொறுப்பாகும். தம்பதிகளுடைய கருத்துக்களின் நன்மைத்தனம் ஒழுக்கமுறைப்படி பிழையான வழிவகைகளை அங்கீகரிக்க முடியாது (உதாரணமாக மலடாக்குதல் (Sterilization) அல்லது கர்ப்பத்தடை (Contraception).

விபசாரம் (Adultery), விவாகரத்து (Divorce) பல மணப்பழக்கம் (Pologamy), சுயாதீன மண ஐக்கியம் (Free Union) என்பன திருமணத்தின் மகிமைக்கு எதிரான பாரிய குற்றங்களாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி 7
## ஏழாங் கற்பனை

### "களவு செய்யாதிருப்பாயாக"

"களவு செய்யாதே" (இ.ச. 5:19) "திருடர், பேராசை உடையோர், கொள்ளையடிப்போர் ஆகியோர் இறையாட்சியை உரிமையாக்கிக் கொள்வதில்லை" (1 கொரி 6:10)

"ஏழாங் கற்பனை உலகப் பொருள்களினதும், மனிதரின் உழைப்பினதும் பயன்களை நீதியோடும் அன்போடும் பயன்படுத்தும்படி கற்பிக்கிறது.

படைப்பின் நலன்கள் மனிதகுலம் முழுவதையும் இலக்காகக் கொண்டுள்ளன. தனிச்சொத்துரிமை நலன்களின் பொது இலக்கை அழித்து விடுவதில்லை. ஏழாங் கற்பனை களவை நீக்குகிறது. பிறருடைய பொருளை உரிமையாளரின் நீதியான விருப்பத்திற்கு எதிராகத் தன் வசப்படுத்துவதே களவு ஆகும்.

பிறர் பொருளை அநீதியாக அபகரித்துப் பயன் படுத்துவது ஏழாங் கற்பனைக்கு எதிரான குற்றமாகும். செய்யப்பட்ட அநீதி பரிகாரத்தை வேண்டுகிறது. அபகரிக்கப்பட்ட பொருள்கள் திருப்பிக் கொடுக்கும்படி கொடுக்கல் வாங்கலின் சமனான நீதி (Commutative Justice) வேண்டுகிறது.

வியாபாரத்தை அல்லது சர்வாதிகாரத்தை இலக்காகக் கொண்டுள்ள செயல்கள், மனிதரை அடிமைப்படுத்தி வியாபாரப் பொருள்களைப்போல் வாங்கவும், விற்கவும், மாற்றி எடுக்கவும் வழிவகுப்பதால் அவற்றைப் பிழையானவை என்று ஒழுக்கச் சட்டம் நீக்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகின் சுரங்கப் பொருள்கள், திரவிய சாதனங்கள் மேலும், காய்கறி வகைகள், மிருகங்கள் மேலும் படைத்தவரால் மனிதனுக்கு அளிக்கப்பட்டுள்ள ஆதிக்கம் எதிர்காலச் சந்ததியினரை அவற்றின் மேலுள்ள உரிமையை மதிக்க வேண்டிய ஒழுக்கக் கடமையிலிருந்து பிரித்து விட முடியாது.

மிருகங்கள் மனிதனுடைய ஆளுகையின்கீழ் வைக்கப் பட்டுள்ளன. ஆகையால் அவன் அவைகளை அன்போடு பராமரிக்க வேண்டும். அவன் தன் தேவைகளை நீதியான முறையில் நிறைவேற்றுவதற்கும் அவைகளைப் பயன் படுத்தலாம்.

மனிதனின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் ஆன்மாக்களின் ஈடேற்றத்திற்கும் திருச்சபை சமூக, பொருளா தார, விடயங்கள் தொடர்பான தீர்மானங்களை எடுக்கிறது. மனிதர் அதி உன்னத நன்மையாகிய கடவுளையே தங்கள் கடைசிக் கதியாகக் கொண்டிருப்பதால், திருச்சபை உலகப் பொது நலன்களில் அக்கறை கொள்கிறது.

மனிதன் தானே சமூக பொருளாதார, வாழ்வின் சிற்பியும், மையமும், இலக்குமாக இருக்கிறான். சமூகப் பிரச்சினையின் முக்கிய தீர்வு யாதெனில், அனைவருக்குமெனக் கடவுளால் படைக்கப்பட்ட பொருள்கள் நீதியுடனும் அன்பின் அடிப்படையிலும் உண்மையாகவே அனைவருக்கும் கிடைக்கச் செய்வதே.

உழைப்பின் முக்கிய பெறுமதி, அதன் உரித்தாளனும் கதியுமாகிய மனிதனிலேயே தங்கியுள்ளது. தனது உழைப்பு மூலம் மனிதன் படைப்பின் வேலையில் பங்கு கொள்கிறான். உழைப்பு கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டால், மீட்பளிக்கவும் கூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையான முன்னேற்றம் எல்லா மனிதரின் முன்னேற்றமே. ஒவ்வொரு மனிதனும் தனது தொழிலுக்கு, அதாவது கடவுளின் அழைப்புக்குப் பதில் அளிக்கும் ஆற்றலை வளரச் செய்வதில் அது தங்கியுள்ளது. (Centensimus Annus 29)

வறியவர்களுக்கு தருமம் வழங்குதல், சகோதர அன்புக்கு ஒரு சாட்சியமாகும். அது கடவுளுக்கு உவப்பான ஒரு நீதியின் பழக்கமாகும்.

உணவின்றி, வீடின்றி, இடமின்றித் தவிக்கும் மனிதரின் பெருந்தொகையில், உவமையில் காட்டப்படும் பசியுற்றுக் கிடந்த ஏழை இலாசரை எப்படிக் கண்டு கொள்ளாமலிருக்கலாம்? (லூக். 17:19-31). "மிகச் சிறியோராகிய இவர்களுள் ஒருவருக்கு நீங்கள் எதையெல்லாம் செய்யவில்லையோ அதை எனக்கும் செய்யவில்லை என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்"(மத் 25:45) என்று இயேசு சொல்வதை எப்படி நாம் கேளாமலிருக்கலாம்?

## பகுதி 8
## எட்டாங் கற்பனை

### "பொய்ச்சாட்சி சொல்லாதே"

"பிறருக்கு எதிராக பொய்ச்சாட்சி சொல்லாதே" (வி.ப 20:16) கிறிஸ்துவின் சீடர்கள் " கடவுளது சாயலாகப் படைக்கப் பட்ட புதிய மனிதனுக்குரிய இயல்பை அணிந்து கொள்ளுங்கள். அவ்வியல்பு உண்மையான நீதியிலும் தூய்மையிலும் வெளிப்படும்" (எபே 4:24)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது செயல்களில் உண்மையைக் காட்டவும், தனது பேச்சில் உண்மையைக் கூறவும், ஏமாற்றுதல், நடித்தல், பாசாங்கு செய்தல் முதலிய செயல்களிலிருந்து, தன்னைப் பாதுகாக்கவும் உதவும் புண்ணியமே உண்மை கூறுதலாகும்.

கிறிஸ்தவன் தனது சொல்லிலும் செயலிலும் இறைவனுக்கு சாட்சியாய் இருக்க வேண்டுமென விவிலியம் கூறுகிறது. ''நம் ஆண்டவருக்கு நீ சான்று பகர்வதைக் குறித்தோ அவர் பொருட்டு நான் கைதியாக இருப்பதைக் குறித்தோ வெட்க மடையத் தேவையில்லை'' (2 திமோ 1:8). விசுவாசத்தின் உண்மைக்கு அளிக்கப்படும் உன்னத சாட்சியமே வேத சாட்சியம்.

மனிதரின் நற்பெயருக்கும், கௌரவத்துக்கும் மதிப்பளிக்கவேண்டிய கடமை அவதூறான சொல்லையும் செயலையும் தடை செய்கிறது.

உண்மையை அறிய உரிமையுள்ள அயலானை ஏமாற்றும் நோக்கத்துடன் உண்மையை மறைத்தலே பொய் ஆகும்.

உண்மைக்கு எதிராகச் செயற்படும் குற்றம் பரிகாரத்தை வேண்டுகிறது.

சகோதர அன்புக் கட்டளை, குறித்த நிலைமைகளில் உண்மையை அறிய விரும்புகிறவருக்கு அதைத் தெரிவிப்பது நல்லதோ இல்லையோ என்று அறிந்துகொள்ள உதவுகிறது.

"பாவசங்கீர்த்தன இரகசியம் மீறக்கூடாதது" (திருச் சபைச் சட்டம் 981), உத்தியோகம் தொடர்பான இரகசியங்கள் பாதுகாக்கப்படவேண்டும். பிறரைப்பற்றி தப்பபிப்பிராயங்களை ஏற்படுத்தும் இரகசியங்களைப் பகிரங்கப்படுத்தக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையிலும், சுதந்திரத்திலும், நீதியிலும் ஊன்றி நிற்கும் தகவலைப் பெற, சமூகத்திற்கு உரிமையுண்டு. சமூகத் தொடர்புச் சாதனங்களைப் பயன்படுத்துவதில் நிதானத்தையும் கட்டுப்பாட்டையும் விதித்தல் பொருத்தமானதாகும்.

கவின் கலைகளும், திருக்கலையும் "இயல்பாகவே இறைவனின் எல்லையற்ற எழிலோடு தொடர்புடையவை. இவ்வெழில் மனித படைப்புச் செயல்களில் ஒருவகையில் வெளிப்படுத்தப்படவேண்டும். இவை தம் படைப்புக்களால் மக்களின் இருதயங்களைப் பக்தியுடன் இறைவன்பால் திருப்புவ தேயன்றி வேறு எந்தக் குறிக்கோளையும் கொண்டிருக்க வில்லை. ஆதலால், அந்த அளவுக்கு இறைவனுக்கும், அவரது புகழ்ச்சியையும் மாட்சியையும் வளர்ப்பதற்கும் பொருத்தமானவை" (திருவழிபாடு 122)

## பகுதி 9.
## ஒன்பதாங் கற்பனை

### "பிறர் தாரத்தை விரும்பாதிருப்பாயாக"

"ஒரு பெண்ணை இச்சையுடன் நோக்கும் எவரும், தம் உள்ளத்தால் ஏற்கனவே அப்பெண்ணோடு விபசாரம் செய்தாயிற்று" (மத் 5:28)

ஒன்பதாங் கற்பனை உடல் ரீதியான ஆசைகளுக்கு எதிராக நமக்கு எச்சரிக்கை தருகிறது.

உடல் ரீதியான ஆசைகளுக்கு எதிரான போர், இதயத்தைத் தூய்மைப் படுத்துவதாலும், கட்டுப்பாடுகளைக் கடைப்பிடிப்பதாலும் நடைமுறைப்படுத்தப்படுறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதயத் தூய்மை கடவுளைக் காணும் கொடையை நமக்குத் தருகிறது.

இதயத்தைத் தூய்மைப்படுத்துதல் செபத்தையும், கற்பை அனுசரிப்பதையும், எண்ணம் கருத்தின், பார்வை என்பவற்றில் தூய்மையையும் வேண்டுகிறது.

இதயத் தூய்மை, பொறுமை, நாணம், அறிவுடைமை ஆகியவற்றை வேண்டுகிறது. நாணம் மனிதனின் அந்தரங்கத்தைப் பாதுகாக்கிறது.

## பகுதி 10
## பத்தாங் கற்கனை

### "பிறர் உடைமையை விரும்பாதிருப்பாயாக"

"உங்கள் செல்வம் எங்குள்ளதோ அங்கே உங்கள் உள்ளமும் இருக்கும்" (மத் 6:21)

பத்தாங் கற்பனை செல்வத்தின்மேலும், அதனால் வரும் ஆதிக்கத்தின் மேலும் கொள்ளும் அளவற்ற ஆசையினால் பிறக்கும் அநீதி ஆவலைத் தடைசெய்கிறது.

பிறருடைய நன்மையைக் கண்டு மனம்புழுங்குதலும், அதைக் தனதாக்கிக்கொள்ள மட்டற்ற ஆசைகொள்வதும் பொறாமை ஆகும். அது ஒரு தலையான பாவமுமாகும்.

திருமுழுக்குப் பெற்றவர் பொறாமையை ஈகையாலும், தாழ்ச்சியினாலும், இறை பராமரிப்புக்குத் தன்னை முற்றாகக் கையளிப்பதாலும் எதிர்த்துப் போராடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்துவின் விசுவாசிகள் "ஊனியல்பை அதன் இழிவுணர்ச்சிகளோடும், இச்சைகளோடும் சேர்த்துச் சிலுவையில் அறைந்து விட்டார்கள்" (கலா 5 ; 24) அவர்கள் தூய ஆவியினால் வழிநடத்தப்பட்டு, அவருடைய விருப்பங்களைக் கடைப் பிடிக்கின்றனர்.

விண்ணரசில் நுழைவதற்கு செல்வங்களை விட்டுப் பிரிதல் அவசியமானது. "இருதயத்தில் ஏழையரின் உள்ளத்தோர் பேறுபெற்றோர்"

ஆசையுள்ள மனிதன் "கடவுளைக் காண விரும்புகிறேன்" என்று சொல்கிறான். கடவுள் மட்டிலுள்ள தாகம் நிலை வாழ்வின் நீராலேயே தீர்க்கப்படும் (யோவா 4:14)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டைப்பட விளக்கம்

ஞான குருவின் பாதத்தடியில் அமரும் போது அவரின் பொருட்டு எனக்கு ஆதாயமான அனைத்தும் இழப்பு எனக் கருதி (பிலிப் 3:7) ஞானத்தைப் பெறுவதும் இறை ஆவிக்குப் பணிவதும் ஒன்று எனும் நிலையை அடைகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் தமிழ் மறை மாவட்டங்களின் ஆயர்களினால் இவ்வாண்டு மறைக்கல்வி ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலையில் கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வியின் அவசியத்தினை உணர்ந்து அருட்பணி மா.றேஜிஸ் இராசநாயகம் அடிகள் மேற்படி ஏட்டின் நான்கு பெரும் பிரிவுகளிலுள்ள 22 தலைப்புக்களை மொழி பெயர்த்துள்ளார். இதை இம் மறையாண்டில் தமிழ் இறையியல் கல்லூரிகளும் கிறிஸ்தவ உயர்கல்வி நிறுவனங்களும் , பயன்படுத்திப் பயனடைவார்களாக. வளர்ந்தோருக்கான மறைக் கல்வியை முன் னெடுக்கும் பங்குத்தளங்களுக்கும் இது கைகண்ட ஔடதம் என்பதில் ஐயமில்லை.

**நூலாசிரியரின்**
**ஏனைய வெளியீடுகள்:**

இயேசு அன்பின் சமுத்திரம்
வாழ்வின் வேர்களைத் தேடி...
உயிரூற்று 1
உயிரூற்று 2
உயிரூற்று 3

ISBN: 978-955-0284-08-5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னை அச்சகம் பிரதான வீதி, யாழ்ப்பாணம்.